உ

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு ௨௯	திருவள்ளுவர் ஆண்டு ௧௯௮௬, சித்திரை மே, 1955.	பரல் ௯

திரு. ரா. பி. சேதுப்பிள்ளையவர்கட்குப்

பாராட்டுப் பெருவிழா

இடம்

தமிழிசைச் சங்கத்தைத் தொன்மைத் தமிழ்ச் சங்கங்களே போன்று எண்ணிலா வண்ணப் பண்களுக்குப் புத்துயிரளித்து என்றும் நின்று நிலவச்செய்த சீர்மை, பெருவள்ளல் செட்டிநாட்டு மன்னர்பால் உள்ளது. அம்மன்னர் பெருந்தகையார் திருப்பெயரால் விளங்கும் அணியார் கோவில் இடம். தமிழ் முதன்மையாக விளங்கும் இடமே தனிப்பெருங் கோயிலாகும். தமிழ், உடல் உளம் உயிர் உடங்கியைந்தது போன்று முறையே கூத்து இசை இயல் என முத்தமிழும் ஒருங்குசேர நிகழ்வதாகும். அதற்குரிய மன்றம் சென்னை '**அண்ணாமலை மன்றம்.**' இதுவே பாராட்டுவிழாப் பாங்கார் இடமாம்.

நாள்

1955 ஏப்பிரல் 18-ஆம் நாள் திங்கட்கிழமை, மாலைப் பொழுது, குறியாச் சிறப்பாகச் சித்திரைச் சதய நாளாம் திருநாவுக்கரசர் திருநாளாகவும் அமைந்தது. இக் குறிப்பினைப் பாராட்டிய மெய்யன்பர்கள் பலருள் ஒருவராகிய திரு. ஜி. சுப்பிரமணிய பிள்ளையவர்களும் அன்றே அப்பேரவையின் கண்ணே அகமிக மகிழ அறிவித்துள்ளார்கள். நாவரசர் பெருமானுர்க்குத் திருஞானசம்பந்தப் பெருமானுரால் கொடுக்கப்பட்ட திருப்பெயர் 'அப்பர்.' சொல்லுக்கு உறுதி அப்பர் எனச் சொல் என்பது உலகப் பெருவழக்கு. அவ்வுறுதிச் செல்வத்தை ஒருங்குபெற்ற செல்வர் நம் சொல்லின் செல்வர். அவர்தம்

பாராட்டுவிழா அப்பர்தம் திருநாளில் அமைந்தது மிகவும் பொருத்தமேயாம்.

அவை

பேருறையுளாம் அண்ணாமலை மன்றம், பொறையொருங்கு மேல்வருங்கால் தாங்கும் நிறைபேரவை. இத்துணைப் பெருங் கூட்டம் யாரும் எதிர்பாராத வகையில் இயைந்ததென்றே கூறலாம். ஆண்பெண் இரு பாலாரும் நிரம்பியிருந்தனர். மன்றத்தின் அகத்தும் புறத்தும் நின்றவர் கூட்டமே மிகுதி. இக்கூட்டப் பெருமக்களின் உள்ளக்கிளர்ச்சி அவர்தம் முக மலர்ச்சியாலும் எழுச்சியாலும் இன்னுரைகளாலும் "தமிழ்மொழிப் பாராட்டினால்" தமிழ்மொழி ஆட்சிமொழியாகி விட்டதென்றே நம்பிய நிலையிலிருந்தன. இக் குறிப்பின் எதிர்த்தோற்றமே, அவையினை வரவேற்ற அன்பர் பேசிய அணிந்துரையாகும்.

அது வருமாறு: 'முன்னாள் முத்தமிழ் வளர்த்த மூவேந்தர் போன்று புரக்கும் வேந்தாம் முதலமைச்சர் திரு. காமராசரும், புரவலர் வேந்தாம செட்டிநாட்டரசரும், புலவர் வேந்தாம் சொல்லின் செல்வரும் ஒருங்கு குழீஇயுள்ளனர். இப் புணர்ப்பே தமிழ் ஆட்சி மொழியாய் அறிகுறியின் மெய்ப் புணர்ப்பாகும் என்பதே. மேலும் ஒன்று கைகூட ஆற்றல் ஆக்கம் அறிவு மூன்றும் ஒருங்கு தோற்றவேண்டும். அத்தோற்றமே இம் முப்பெருமக்களின் தோற்றமாகும் என்பதுமாம்.

பாராட்டு

பாராட்டுக்குரிய தகுதி வாய்ந்தார் சொல்லின் செல்வர் சேதுப்பிள்ளையவர்களாவர். தென்றலும் தீந்தமிழ்ப் பொருநையும் நின்று நிலவும் பாண்டி வளநாட்டு வளமெலாம் காட்டும் ஆடி எனத் திகழும் நெல்லைமாவட்டத்துச் சீர்சால் செப்பறைப்பாங்கர் பேர்பெறும் இராசவல்லிபுரம் என்னும் நன்மைவாய்ந்த ஓர் ஊர் உள்ளது. அதன்கண் வேளாண் விழுத்திணைத் தோன்றிய விழுமியார் நம் சேதுப்பிள்ளை யவர்களாவர். இவர்கள் இளமையின்கண்ணே நுண்மாண் நுழைபுலச் செல்வராய்த் திகழ்ந்தனர். தனிப்பெரும் தகைமை வாய்ந்த தாய் மொழியாம் தமிழ்மொழியினும் சார்புலக மொழியாம் ஆங்கிலத்திலும் ஒங்கு பெரும் புலமை பெற்றனர். நாட்டுக்கு நலம் பயப்பது ஆட்சிமுறையேயாம். அம்முறையினை முட்டின்றி நிறுத்துவது முறை நூலேயாகும். முறைநூலெனினும் சட்ட நூல் எனினும் ஒன்றேயாம். அச்சட்ட முறையினை வழுவாவண்ணம் உரனுடன் எடுத்துக்காட்டுபவர் சட்டநூற் புலவராவர். இவர்களை வழக்குரைஞர் என்பர். இவர்களே மன்றுடியராவர். அந்நூற் புலமையிலும் தேறிப் பட்டமும் பெற்றுள்ளார்.

தம் புலமையெல்லாம் தாய்மொழி வளர்ச்சிக்குத் துணையாவதே தவறிலையென வுன்னினர். அதற்கேற்ற தொழில் ஆசிரியத் தொழிலெனவே அகங்கொண்டனர். அதற்காம் வழியில் முயன்றனர். நெல்லை நகராண்மைக்கழகத் துணைத் தலைவராய்ப் பணிபுரிந்தனர். கல்விக்குழுவினும் கருத்தொருமித்துத் திருத்தமுறத் தமிழாக்கம் ஒன்றே குறிக்கொண்டு தொண்டாற்றுகின்றனர். பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியராய்த் திகழ்ந்தனர். அண்ணுமலைப் பல்கலைக்கழக அருந்தமிழ்ப் பேராசிரியராய் அணிசெய்தனர். கடந்த இருபதாண்டுகளாகச் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவராய்ப் பேராசிரியராய்ப் பெரும்பணி புரிந்து வருகின்றனர்.

தமிழகத்து நம் சொல்லின் செல்வர் சென்று தலைமை பூணுத தனியுரை நிகழ்த்தாத கழகங்களோ, மன்றங்களோ, ஆதீனங்களோ, ஆலயங்களோ, அணியார் நாடு நகரங்களோ கிடையா. பழம்பெருந் தமிழ்ச்சொற்களைக் கிழமைமாறுது பெருமக்களிடையே குழைத்து இனிமைபெற ஊட்டும் குணமிக்கார். பெரும்பாலும் இவர் தம் பேச்சும் உரைநடைநூலும் மோனை எதுகையமைய முழங்கும் தன்மைய. எளிய இனிய சிறு சொற்களால் திட்டநுட்பச் செறிவோடு திகழ்வன. உவகைச்சுவை மிக்கன. உளங்கொளப் பதியும் வளமைய. தமிழ் வளர்க்கும் சிவத்திருவாம் தம்பிரான் தரத்தாங்கிய பட்டம் சொல்லின் செல்வர் எனச் சொல்லுவர் பல்லோர்.

சென்னைக்கோநகர்க்கண் பல்வேறிடங்களில் பல்வேறு காலங்களில் பல்வேறு வகுப்புக்களை நிகழ்த்திப் பலரும் பயன் பெறும் பண்பாளராயினர். அவற்றுள் சிறந்தன. கந்தபுராணம், இராமாயணம், சிலப்பதிகாரம், வள்ளுவப்பயன் முதலியன வாகும். சிவனெறியாம் செந்நெறிக்கண் நிறைந்த பற்றுடையவர். சிவமும் தமிழும் உயிர் உடல் போன்று பிரிப்பின்றித் தொன்றுதொட்டு இயைந்துவரும் தமிழகப் பெரும்பண்பென்பதனைச் சொன்னடைகளால் வலியுறுத்தும் அரும்பண்பினராவர்.

அவ்வப்போது சிறந்த செய்தித்தாள்களிலும், வெளியீடுகளிலும் வெளியிட்டுள்ள கனிவும் இனிமையும் மிகுகட்டுரைகள் எண்ணில. நூல் வடிவில் போந்து பல பதிப்புக்கள் கொண்டு திகழ்வன அளவில. கல்லூரிப் பாடப் புத்தகங்களாகத் திகழ்வன கணக்கில. அவற்றுள் சில வருமாறு: திருவள்ளுவர் நூல் நயம், தமிழின்பம், ஊரும்பேரும் முதலாயின.

'தமிழின்பம்' என்னும் நூலை இந்தியப் பேரரசு நன்கு மதித்து ஐயாயிரம் பரிசு வழங்கியது. ஐந்திலக்கணமும் நிறைந்த

அந்நூற்கு எத்தனை ஐயாயிரம் வழங்கினும் ஈடாகாதென்பது எவரும் எளிதினுணரும் உண்மையேயாம். கடை எழுவள்ளல் களும், மூவேந்தரும், குறுநிலமன்னர் புரவலர்களும் பொன்றிய பின்றை இதுவே நந்தமிழ் மொழிக்கு முதல் பரிசாம் ஆட்சிப் பரிசாகும். இனிப் பல்வேறு பரிசுகள் இதன்வழியாக வருதலும் கூடும். இதனால் நந்தமிழ்த்தாய் முந்திய நிலைபோல் 'ஞாலம் அளந்த மேன்மையுடன்' அரசுவீற்றிருத்தலும் கூடும். அதன் கால்கோள் இப்பாராட்டுப் பயனுள் ஒன்றுமாகும்.

முதலமைச்சர் திரு. காமராசர் அவர்கள் பேரவைத் தலைமை பூண்டார்கள். திரு. தண்டபாணி தேசிகர் அவர்கள் திருநெறிய தமிழ்ப்பா இன்னிசையுடன் ஓத விழாத் துவங்கப் பெற்றது. குமுதம் ஆசிரியர் திரு. எஸ். ஏ. பி அண்ணாமலை யவர்கள் அனை வரையும் வரவேற்றார்கள். திரு. அ. மு. பரமசிவானந்தம் அவர் கள் நகரப் பெருமக்கள் சார்பாக நீண்டதோர் வாழ்த்துப் பாமாலை யொன்று படித்தளித்தனர். நம் கழகம் உள்ளிட்ட பல கழகங்களும், தனிப்பட்டவர்களும் பாமாலையும், பூமாலையும், நூல்களுமாய்ப் பல வழங்கினர்.

உள்நாடு வெளிநாட்டுக் கழகங்கள், அன்பர்கள் பலர் வாழ்த்து விடுத்துள்ளனர். அவை முறையே பம்பாய், கல்கத்தா, இலங்கை, மலேயா, இந்தோனேசியா முதலியவிடங்களும், சிவத் திரு குன்றக்குடி யடிகளார், திருவாளர், பி. எஸ். குமாரசாமி ராசா, மு. ராகவையங்கார், நாமக்கல் கவிஞர், யோகி சுத் தானந்த பாரதி முதலியோருமாவர்.

திரு. காமரசர் அவர்கள் சேதுப்பிள்ளையவர்களுக்குப் பொற்பதக்கம் அணிவித்துப் புகழுரை புகன்றனர். அவை வருமாறு: தமிழ் வளர்ச்சிக்காகத் தம் வாழ்நாள் எல்லாம் வழங்கியவர். நனவினும் கனவினும் செல்லும் இடம் எல்லாம் தமிழ் நினைப்பே தலையாய உலையா நினைப்பாகும் இவர்க்கு. தமி ழுக்குப் பண்டுபோலுள்ள இத்தகைய நல்ல நிலைமையை மீண்டும் கொண்டுவந்த பெருமை சேதுப்பிள்ளையவர்களையே சேர்ந்தது. அவர்களுக்கு அளித்த பரிசு தமிழ்ப் பெருமக்களுக்கு அளித்த ஒரு பெரும் பரிசேயாகும். ஈண்டுப் பரிசு என்பது பெருமை என்னும் பொருட்டு. ஆகவே நாமெல்லாம் பெருமகிழ்ச்சி யடைய வேண்டிய தென்பதேயாம்.

செட்டி நாட்டரசர் டாக்டர் எம். ஏ. முத்தைய செட்டியா ரவர்கள் பொன்னுடையைப் பொற்புடன் போர்த்திப் பொன் மொழி பல புகன்றனர். அவற்றுள் சில வருமாறு: 'கடந்த இருபது ஆண்டுகளாகத் தாய்மொழியாம் தமிழையும் தமிழ்ப்

புலவர்களையும் ஆதரிக்கக் கூடிய புத்துணர்ச்சி தமிழரிடையே இருந்து வருகிறது. திரு. சேதுப்பிள்ளையவர்கள் இந்நன்னாக் கத்திடையே வாழ்ந்து வருவது தமிழ் நாட்டின் தனிப்பெரும் பேறாகும். அவர்களால் எழுதப்பட்ட சுவடிகள் அனைத்தும் சிறந்தனவேயாம். அவற்றைப்போன்ற பல புத்தகங்கள் வெளி வருதல் வேண்டும். ஆயின் ஆட்சியினர் நூறாயிரக் கணக்கில் பணம் ஒதுக்குதல் வேண்டும். கல்லூரிகளிலும் தமிழுக்குரிய தகுதியினை இன்றியமையாது அளித்தாதல் வேண்டும். டாக்டர் இலட்சுமணசாமி முதலியாரவர்களை நோக்கிய வண்ணமாகவே, நல்ல காட்சியிது, தமிழை ஆதரிப்பவர்களில் நானும் ஒருவன். தமிழ் வளர்ச்சிக்காகத் திருமடத்தம்பிரான்மார் சிறந்த உதவி செய்கின்றனர். இவ்வேளையில் அவர்களுக்கு நன்றி செலுத்து தல் வேண்டும். தமிழ்ப் புலவர்கள் ஒன்று சேர்ந்தால் தமிழுக்கு மிகுந்த உதவி செய்ததாகும். திரு. சேதுப்பிள்ளையவர்களைப் போல் பிற புலவர்களுடன் ஒன்றாக வேலை செய்ய முன் வருதல் வேண்டும். அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தின்கண் எத்துணைத் தமிழ்ப் புலவர்கள் வந்தாலும் இடமிருக்கின்றது. ஐந்தாறு ஆண்டுகளாகத் தமிழ்ப் புத்தகங்கள் வெளியிடுவதில் பலர் ஊக் கங் காட்டுகின்றனர். அவர்களைப் பாராட்டுகின்றேன்' என்பதே.

கல்கியாசிரியர் திரு. சோமசுந்தரம் கேட்டுக் கொண்டதற் கிணங்க அந்நிலையத்தின் அன்பளிப்பாக மற்றோர் பொன்னாடை யையும் செட்டி நாட்டு மன்னர், சேதுப்பிள்ளையவர்கட்குச் சிறப் புறச் சேர்த்தினார்கள்.

பின்பு அமைச்சர், திரு. எம். பத்தவத்சலம் அவர்கள், திரு. டி. எம். கிருட்டிணசாமி ஐயரவர்கள், பன்மொழிப் புலவர் திரு. தெ. பொ. மீனாட்சி சுந்தரனாரவர்கள், பேராசிரியர் திரு. சிரீனிவாச ராகவன் அவர்கள், திரு. ஜி. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் முதலிய பெரும்புலமைச் செல்வர்கள் அரும் பெரும் பாராட்டுரை பல அன்புடன் நிகழ்த்தினர்.

திரு. சேதுப்பிள்ளையவர்கள் அனைவர்களுக்கும் தக்கவாறு நன்றி செலுத்தினார்கள். அப்பொழுது கூறியவற்றுள் சில வரு மாறு : நண்பர்கள் அன்பால் அளித்த மிக்க சிறப்பினை நினையுங் கால் நெஞ்சம் உருகுகின்றது. பேச்சுவரவில்லை. பெரியவர்கள் வாழ்த்து வழங்கினர். இதைவிடச் சிறந்த பெருமை எனக்கு வேறு என்ன இருக்கிறது ? யான் தமிழ்த்துறையில் இறங்கிய போது அமிழ்தினும் இனிய தமிழின்பத்தின் பொருட்டே இறங்கினேன். அப்போது தமிழுக்கு இத்துணைச் சிறப்பு ஏதும் இன்று. வரும் என்ற நம்பிக்கையும் அறிகுறியும் இல்லை.

தமிழ்மக்கள் இப்பொழுது சிறிது ஆதரவு அளித்து வருகிறார்கள். நல்ல தமிழைப் படிக்கும் ஆர்வம் நன்றாகப் பொங்கி வெள்ளமாக ஓடுகிறது. இனி ஆட்சியினர் ஆதரவினும் மக்கள் ஆதரவே அமைவுடைத்தாகும். 'தமிழின்பம்' என்னும் இப் புத்தகம் ஐந்தாண்டுகளுக்கு முன் எழுதப்பட்டது. மூன்று பதிப்புக்கள் வெளியாகி விட்டன. இதனால் மக்கள் ஆதரவுமிக் கிருக்கின்றதென்பது புலனாம். நல்ல தமிழைக் குடிமக்கள் புரிந்து கொண்டுவிட்டார்கள். அதை ஏற்று அவர்கள் சார் பாகத் திரு. காமராசர் அவர்கள் இப்பதக்கத்தை எனக்கு அளித்தார்கள்.

அக்காலத்தில் வழக்காடுவதைவிட மேடையில் நான் சொல்லாடிக் கொண்டிருந்தேன் என்று என்னைப் பிறர் சொல் வது வழக்கம். என் நலத்துக்கு உழைப்பதை விடத் தாய் மொழியாம் தமிழின் நலத்துக்கு உழைப்பதனையே மேலெனக் கொண்டேன். என் ஆற்றலுக்குத் தக்க பணிபுரிந்தேன். புரிந்துவருகின்றேன். இந்நூல் தமிழ்மக்கள் பெற்ற பரிசு என்று கருதுகின்றேன். உங்கள் அன்பை என் மனக்கோவி லில் வைத்து என்றும் வாழ்த்துவேன் என்பதே.

அன்புப் பரிசாகப் பெற்ற வெண்பொன் ஐயாயிரத்துடன் மேலும் பத்தாயிரம் வெண்பொன் சேர்த்துப் பதினையாயிரம் வெண்பொன்னாகத் தாம் தமிழ்த்தாய்க்குக் காணிக்கை செலுத்தப் போவதாவும், சென்னை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம இரண்டினுக்கும் தம்வளமெலாம் கடைசியில் வழங்கி விடவே விழைவு கொண்டிருப்பதாகவும் அன்புகுழைந்த இன்ப மொழியில் எழிலுற அறிவித்தனர்

திரு. எஸ். இராமசாமி நாயுடு அவர்கள் அனைவர்கட்கும் நன்றியும் வாழ்த்தும் நயம்பெற நவின்றனர். இப்பாராட்டு விழாக்குழுவில் மேனிலை முறை மன்ற நடுவர் திரு. என். சோம சுந்தரம் அவர்கள், திருவாளர்கள் சி. எஸ் இரத்தின சபாபதி முதலியார், மித்திரன் ஆசிரியர், சி. ஆர். சிரீனிவாசன், டி. எம். நாராயணசாமிப் பிள்ளை, ஆனந்தவிகடன் ஆசிரியர் எஸ். எஸ். வாசன், சேவு. மெ. மெய்யப்ப செட்டியார், எஸ். இராமசாமி, எஸ். ஏ. பி. அண்ணாமலை, செ. மெ. பழனியப்பச் செட்டியார் முதலியோர் அமர்ந்துள்ளதாக அறிவித்தனர்.

பாராட்டுப் பத்து*

[வித்துவான், திரு. செ. வேங்கடராமச் செட்டியார்]

'தமிழின்பம்' எனுநூலைத் தகுதிபெற உருவாக்கித்
தமிழின்பத் தகையதெனத் தரணியெலாஞ் சுவைத்துணரத்
தமிழ்மகனார் ரா. பி. சே. தந்தபெரும் புலமையறிந்
திமிழ்கடல்சூ ழிந்தியர்கோ ஈந்தனர்காண் பெரும்பரிசில். (௧)

பெரும்பரிசில் பெறுபவர்ரா. பி. சேதுப் பிள்ளையவர்
விரும்புமெழில் தமிழணங்கே விளங்குபுகழ்த் தமிழ்நாடே
கரும்பனைய மொழிபேசும் கலையார்வத் தமிழர்களே
பெரும்பரிசை யாயிரமும் பெற்றுமகிழ் கொள்கின்றார். (௨)

பழந்தமிழ்நூற் பெருங்கடலிற் படிந்துழந்து நுணித்தறிந்த
விழுமியபல் பெருங்கருத்தாம் விழைமுத்துக் குவியலினை
எழிலுறுசொல் லெனுநூல்கோத் திலங்குமணி கலனாக்கிப்
பழந்தமிழ்த்தாய் பதத்தணியும் பத்தர்பெறும் பயனிதுவே. (௩)

திரு.சேதுப் பிள்ளையெனின் தெய்வசுவைத் தமிழென்பேம்
இருளார்ந்த உளத்தினரும் இனியதமிழ்ச் சுவையுணரப்
பொருளார்ந்த சொல்லடுக்கிப் பொருந்தெதுகை மோனையொடும்
தெருளாரப் பேரவையில் தித்திக்கப் பேசுவதால். (௪)

செவியினிக்கக் கேட்பவர்தம் சிந்தைகளி கூர்ந்தினிக்கக்
கவியினிக்கப் பேசுமிவர் கவினுரையைக் கேட்டபினே
புவியறியத் தமிழென்றால் பொருளினிமை யெனப்புகன்றார்
சவியுறுதொல் லோரெனலாம் தடைகால மிடையிலதேல்! (௫)

கம்பர்பிரான் கவிச்சுவையில் கருத்தழுந்திப் பேசுங்கால்
நம்புமெழில் சிலம்பினயம் நாவினிக்க நவிலுங்கால்
இம்பரிலே இளங்கோவும் இணையில்புகழ்க் கம்பருநேர்
நம்மெதிரே நின்றுமொழி நவில்கின்றார் எனத்தோன்றும். (௬)

இறையனார் களவியலுக் கினியவுரை வரைந்தளித்த
துறையறியும் நக்கீரர் தூயதமிழ் நடைகாட்டப்
பொறையுடம்பு பெயர்மாறிப் புகழ்சேதுப் பிள்ளையெனத்
தரைவந்தார் எனமொழிவார் தகுமிவர்சொன் னடைகண்டார். (௭)

தமிழ்மொழியின் நிலைசிறக்கத் தமிழ்நாட்டின் புகழ்பரக்கத்
தமிழ்ப்புலவர் வள்ளுவனார் தரைக்களித்த திருக்குறளும்
அமிழ்தனைய மொழிவழங்க அறிசேதுப் பிள்ளையினால்
அமைவுடைய தனிவிளக்கம் அடைந்ததெனின் புகழ்சிறிதோ. (௮)

பேச்சினிலே வல்லவராய்ப் பேசியதை யெழுதாரும்
பேச்சின்றி எழுதுதொழில் பெற்றாரும் பலராகப்
பேச்சினிலும் எழுத்தினிலும் பெருந்தகுதி பெற்றுயர்ந்த
பேச்சாளர் எழுத்தாளர் பேர்சேதுப் பிள்ளை அவர். (௯)

வாழியர்காண் பல்லாண்டு வளர்புலமைத் தலைமகனார்
வாழியர்காண் இந்தியர்கோ வழங்குபெரும் பரிசிலவர்
வாழியர்காண் சொலின்செல்வர் மாண்சேதுப் பிள்ளையவர்
வாழியர்காண் நலம்பல்கி மணிமிடற்றோன் திருவருளால். (௧௦)

---

* சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் திருவாளர் ரா. பி. சேதுப்பிள்ளை B.A., B.L., அவர்கள் எழுதிய 'தமிழின்பம்' எனும் நூற்கு இந்திய அரசியலார் ஐயாயிரம் வெண்பொற் காசுகள் பரிசளிக்க விழைந்தமை யறிந்து பாடியது.

பாராட்டு வாழ்த்துமலர்*

செந்தமிழ்ப் புலவ ரேறே!
சிதம்பர நாதச் செம்மால்
முந்திய விருப்பை ஏற்றே
முன்னரிஇக் கூட்டத்துக்கு
வந்தது கண்டே நாங்கள்
மகிழ்ச்சியில் திளைக்கின் றேமால்
இந்தநன் னாளெம் வாழ்வில்
எழிலுறு பொன்னா ளாமே! (௧)

உள்ளமும் செயலும் ஈன்ற உயர்தமிழ் மொழிக்குத் தந்தே
வள்ளுவம் உலகில் எங்கும் வயங்கிடப் பணிக ளாற்றும்
தெள்ளுசீர்க் குணக்குன் றே! எம் சிதம்பர நாதத் தோன்றல்!
வள்ளலே வருக! எங்கள் மாண்புறு தலைவ! வாழ்க! (௨)

சிதம்பர நாதன் என்னும் திருப்பெயர்க் கேற்பப் பன்னாள்
சிதம்பரத் திருந்து நல்ல செந்தமிழ் நாதம் செய்வாய்!
நிதமுநற் புலவர் வாழ்வை நினைவினிற் கொண்டே வேண்டும்
உதவிகள் பலவும் செய்யும் உத்தம! வருக! வாழ்க! (௩)

அண்மையில் சிதம்ப ரத்தில் அமைந்தமா நாட்டில் நின்றன்
திண்மையும் தெளிவும் வாய்ந்த உரைகளைச் செவிம டுத்தோம்
கண்மணி யனையாய் நீயே கனித்தமிழ்க் கேற்ற மைந்தன்
உண்மையே கூறுகின்றோம்; புகழ்ச்சியாய் உரைக்க வில்லை. (௪)

செந்தமிழ் நாட்டில் நாளை திகழ்தமிழ்ப் புலவர் தம்மில்
மந்திரி ஒருவர் வேண்டும் நிலையது வாய்த்த தானால்
புந்தியில் மிகுந்த நீயே பொருந்திடு அமைச்ச ராவாய்
விந்தையொன் றிதிலே இல்லை; உண்மையே விளம்பு கின்றோம். (௫)

இன்றுநின் பெருமை ஓர்ந்தே இங்கிலாந் தழைத்தந் நாட்டில்
ஒன்றுபல் கலைகள் போற்றும் உயர்நிலைக் கழகம் காண
நன்றுனை வேண்டிற் றென்னும் நலமிகு செய்தி கேட்டோம்
தென்றலே! தமிழர் வாழ்வே! சென்றுநீ வருக நன்றே! (௬)

பலகலைக் கழகங் காணப் பயணமேற் கொள்ளும் அண்ணல்!
துலங்கிடு தமிழின் பம்அத் தொலைநகர் தனிலும், வேறு
தலங்களும் பரவ நின்னால் சார்ந்தவை செய்க என்றே
புலங்கொள வேண்டு கின்றோம் புலவர்தம் மணியே வாழ்க! (௭)

நின்னெழிற் பயணம் எங்கும் நீள்புகழ் வளத்தி னோடும்
இன்புற அமைய வேண்டி இறைவனை வாழ்த்து கின்றோம்
சென்றுநீ வருக எங்கள் சிதம்பர நாத வேந்தே
அன்புரு வான ஐய, அண்ணலே வாழ்க! வாழ்க! (௮)

---

* சென்னை மாநிலத் தமிழாசிரியர் கழகத் தலைவரும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவரும் ஆகிய பேராசிரியர்: டாக்டர். அ. சிதம்பரநாதன் செட்டியார் M. A., அவர்கள் மேல் நாட்டுப் பல்கலைக் கழகங்களைப் பார்வையிடும் நோக்குடன் இங்கிலாந்துக்குப் புறப்படும் செய்தி கேட்டுச் சென்னை மாணவர் மன்றத்தினரும், சென்னைத் தமிழாசிரியர் கழகத்தினரும் மகிழ்ந்து படித்தளித்தது.

திருக்குறள் தண்டபாணி விருத்தியுரை

அதிகாரம் ௪௨

கேள்வி

அஃதாவது கற்றறிந்தார் கூறும் நூற்பொருள்களைக் கேட்டல். இது கற்றறிவுடையார்க்காயின் தாம் கற்றுணர்ந்த பொருள்களை உள்ளத்தில் பதித்து வலியுறுத்தலானும், கல்லாதவர்க்காயின் அறிவை உண்டாக்குதலானும் கல்வி கல்லாமைகளின் பின் வைக்கப்பட்டது.

இவ் வதிகாரத்தில் கேள்வியது சிறப்பும், கேள்வியுடையாரது சிறப்பும், கேள்வியுடையார் எய்தும் பயனும் கேளாமையின் தீமையும் முறையே கூறுவான் வைத்த ஆசிரியர் முதற்கண் கேள்வியது சிறப்புக் கூறுகின்றார்.

௪௧௧. செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வஞ்
செல்வத்து ளெல்லாந் தலை.

(இ - ள்) செல்வத்துள் - செல்வங்கள் பலவற்றுள்ளும், செல்வம் - (சிறப்புடைய) செல்வமாவது, செவிச் செல்வம் - செவியான் வருஞ் செல்வம்; அச் செல்வம் -, செல்வத்துள் எல்லாம் - (பிற) செல்வங்கள் எல்லாவற்றினும், தலை - தலைமையானது (ஆதலால்). எ - று.

(இ - து.) கேள்விச் செல்வமே சிறந்த செல்வம். (எ - ம்.)

செவியான் வருஞ் செல்வம் - கேள்விச் செல்வம். கேள்வியால் எல்லாப் பொருள்களையும் அறிதல். பிற செல்வங்கள் பொருட் செல்வமும் கல்விச் செல்வமும். பொருட் செல்வத்தினும் கல்விச் செல்வம் சிறந்ததாதல் மேலதிகாரங்களிற் பெறப்பட்டது. அக் கல்விச் செல்வமும் கேள்வியானாதலின் கேள்விச் செல்வம் தலைமையுடையதாயிற்று.

கேள்விச் செல்வமே சிறந்த செல்வ மென்றவாறு. (க)

இடையறாது ஈட்டத் தக்கது அஃது என்பது வரும் குறள்.

௪௧௨. செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கு மீயப் படும்.

(இ - ள்.) செவிக்கு உணவு - செவிக்கு உணவாகிய கேள்வி, இல்லாத போழ்து - இல்லாத பொழுது, வயிற்றுக்கும்

சிறிது - வயிற்றுக்கும் சிறிது உணவு, ஈயப்படும் - இடப்படும். (எ - று.)

(இ - து.) உடம்பை வளர்க்கும் உணவினும் அறிவை வளர்க்கும் கேள்வி சிறந்தது. (எ - ம்.)

உடம்பிற்குப் பசி இயற்கையாயதுபோல உயிருக்கு அநாதியே பொருந்திய ஆணவக்கட்டால் அறியாமை இயற்கையாயிற்று. இதனுனன்றே 'அரியகற் றாசற்றார் கண்ணுந் தெரியுங்கா—லின்மை யரிதே வெளிறு' (குறள், ௫0௩) என்பதாயிற்று இத் தமிழ்மா மறையென்பது. உடற்பசி அவ்வப்போது உணவாற் றணித்தற் பாலது. உயிரைப்பற்றிய அறியாமையோ அவ்வாறு இடையிட்டுத் தீர்த்தற்காகாது நிற்பது. இதனுனன்றே ஆசிரியர் 'அறிதோ றறியாமை கண்டற்றால்' (குறள் - ௧௧௧0) என்றார். மற்றும் வயிற்றுணவு இடையறாதுண்ணின் உடலை நோய் செய்யும் இயல்பிற்று; 'இழிவறிந் துண்பான்க ணின்பம் போ னிற்கும்—கழிபே ரிரையான்க ணோய்' (குறள் - ௯௪௬) என்றதுமிதுபற்றி. செவியுணவோ வெனின் 'தொட்டனைத் தூறு மணற்கேணி' (குறள் - ௩௯௬) போலக் கொள்ளக் கொள்ளப் பயன் மிகுவது. ஆதலின் வயிற்றுணவைக் காலத்தானும் அளவானும் வரையறுத்துக் கொள்க எனவும், செவியுணவை எக் காலமும் எத் துணையுங் கொள்க எனவும் கூறினு ராயிற்று. கேள்வியை உணவெனவும், செவி அதனை உண்பது போலவுங் கூறியது உபசாரம்.

இவை யிரண்டு பாட்டானும் கேள்வியது சிறப்புக் கூறப்பட்டது. (உ)

கேள்வியுடையாரது சிறப்புக் கூறுவது வருங் குறள்.

௪௧௩. செவியுணவிற் கேள்வி யுடையா ரவியுணவி
னான்றாரோ டொப்பர் நிலத்து.

(இ - ள்.) செவியுணவின்-செவி யுணவாகிய, கேள்வியுடையார் - கேள்வியினையுடையவர், நிலத்து - நிலவுலகில் இருப்பவராயினும், அவியுணவின் - அவியுணவினையுடைய, ஆன்றாரோடு - தேவரோடு, ஒப்பர் - ஒப்பாவர். (எ - று.)

(இ - து.) கேள்வி யுடையார் தேவர் போல்வர். (எ - ம்.)

செவியுணவிற் கேள்வி - இருபெய ரொட்டுப் பண்புத்தொகை; இன் என்பது சாரியை, அல்வழிக்கண் வந்தது. அல்வழிப் புணர்ச்சியின் னகரம் றகரமாகத் திரிதற்கு விதியில்லாமை

யின் அங்ஙனமாயது வலிக்கும் வழி வலித்தலாகக் கொள்ளப் படும், செய்யு ளாதலின்.

அவியுணவு - தேவர்க்கு வேள்வித்தீயிற் கொடுப்பன. ஆன்றார் - நிறைந்தார். பலவகையாலும் குறைபாடின்றி நிறைந்தவ ராதலின் தேவர் ஆன்றா ராயினர். கேள்வியுடையார் அறிவான் நிறைந்து இன்ப வாழ்க்கையுடையராதலின் தேவரோ டொப்பர். உயிர்களைக் கொன்று பெறப்படும் அவியுணவுமின்றி, வீடுபேற் றிற்கு இடமல்லாத போகபூமியின் வாழ்க்கையுமின்றித் தேவரோ டொத்தலின், கேள்வியுடையார் தேவரிற் சிறந்தா ரென்பார். 'அவியுணவி - னான்றாரோ டொப்பர் நிலத்து' என்றார். மேல் செவிக்குண வெனக் கூறினார், ஈண்டு அது விளங்க 'செவியுண விற் கேள்வி' என்றார்.

கேள்வியுடையார் சிறப்புக் கூறியது. (௩)

கேள்வியுடையார் எய்தும் பயன் கூறுவன வரும் நான்கு குறள்கள் :

௪௧௪. கற்றில னாயினுங் கேட்க வஃதொருவற்
கொற்கத்தி னூற்றாந் துணை.

(இ - ள்.) (ஒருவன்) கற்றிலனாயினும் - (கற்கத்தகும் நூல் களைக்) கல்லாதவனாயினும், கேட்க - (கற்றறிந்தார் சொல்லும் நூற் பொருள்களைக்) கேட்கக் கடவன்; (ஏனெனில்) அஃது - அக் கேள்வி, ஒருவற்கு - ஒருவனுக்கு, ஒற்கத்தின் - வறுமை வந்த விடத்து, ஊற்றாம் - ஊன்றுகோலான, துணை - துணையாம். (எ - று.)

(இ - து.) கேள்வியறிவு உற்ற சமயத் தூன்றுகோல்போல உதவுமாதலின், ஒருவன் கல்வி கல்லாவிட்டாலும் கற்றவர் சொல்வதைக் கேட்கக்கடவன். (எ - ம்.)

'கற்றில னாயினும்' என்பதில் உம்மை 'மறப்பினும் ஒத்துக் கொளலாகும்' (குறள் - ௧௩௪) என்புழிப்போலக் கற்றிலனாதல் தகாது என்னும் பொருள் தோன்ற நிற்றலின் எதிர்மறையும்மை யாம். ஒற்கமாவது வறுமை. 'இலம்பா டொற்கமா யிரண்டும் வறுமை' என்பது தொல்காப்பியம் (உரிச்சொல்லியல் - ௬௨). எனவே, பொருளானாக அறிவானாக வறுமையுற்றுத் தளர்ந்த வழி 'ஊற்றாந் துணை' யாவது கேள்வியாம். ஊன்றப்படும் கோல் ஊன்று என முதனிலைத் தொழிலாகு பெயராய் நின்று வலித்தலாய் ஊற்று என நின்றது. 'கேடில் விழுச் செல்வம் கல்வி' (குறள் - ௪௦௦) யாதலால் அதனோ டொருபுடையொத்த கேள்வி 'ஒற்கத்தி னூற்றாந் துணை' யாயிற்று.

கேள்வி ஒருவற்கு ஊன்றுகோல்போல் உதவும் என்றதிது. (௪)

இதனை விளக்குவது வருங் குறள்.

௪கரு. இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே
யொழுக்க முடையார்வாய்ச் சொல்.

(இ - ள்.) ஒழுக்கமுடையார் வாய்ச் சொல் - (கல்வியானாய) ஒழுக்கமுடையவர்கள் கூறும் வாய்மையுடைய சொற்கள், இழுக்கல் உடையுழி - வழுக்கல் உள்ளவிடத்து, ஊற்றுக்கோலற்றே - ஊன்றுகோல் போல (உதவும். ஆதலின் அவர் சொற்களைக் கேட்க.) எ - று.

(இ - து.) வழுக்கும் நிலத்தில் செல்வார்க்கு ஊன்றுகோல் கீழ்விழாமல் உதவுதல்போல, நல்லார் சொல்லைக் கேட்டல் கல்லாதவர்க்கும் வறுமையுற்ற காலத்தில் உதவும். (எ - ம்.)

உழி - இடம். ஊன்றுகோல் என்பது வலித்தலாய் ஊற்றுக்கோலென நின்றது. உவமைப் பகுதியில் வழுக்கு நிலம் என்றமையின், பொருட் பகுதியில் வறுமைக் காலம் கொள்ளப்பட்டது. வாய்மையுடைய சொல் என்பார், வாய்ச்சொல் என்றார்.

கற்றலானாய பயன் அதற்குத் தக நிற்றலாதலான், கல்விப் பயனை எய்தினார், என்பார் ‘ஒழுக்க முடையார்’ என்றார். அவர் சொற்களைக் கேட்க என்பது குறிப்பெச்சம்.

நல்லார் சொற் கேட்டல் தாழ்வைத் தடுக்கும் என்றதிது. (௫)

பெருமையைக் கொடுக்கும் என்பது வருங் குறள் :

௪கசு. எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்.

(இ - ள்) (ஒருவன்) நல்லவை - (நல்லார் சொல்லும்) நல்லுரைகளை, எனைத்தானும் - எவ்வளவு சிறிதாயினும், கேட்க - கேட்க (அக் கேள்வி), அனைத்தானும் - அவ்வளவாயினும், ஆன்ற - நிறைந்த, பெருமை தரும் - பெருமையைத் தரும். (எ - று.)

(இ - து.) ஒருவன் சிறிதாயினும் நற்பொருளைக் கேட்டால், கேட்ட அளவாகவேனும் அவன் நிறைந்த பெருமையுடையனாவான். (எ - ம்.)

எனைத்து அனைத்து என்பவற்றாற் குறிக்கப்பட்ட அளவு கேட்கும் பொருளையும் காலத்தையும் ஒருங்கு குறிக்கும். எறும்பூரக் கற்குழிதல் போல அறிவை ஆழமாக்கியும், மழைத்துளி போல வந்தீண்டி அறிவைப் பெருக்கியும் வருமாதலின், இச் சிறு பொருளைக் கேட்டென் பயன் சிறிது பொழுது கேட்டென் பயன் என்று இகழாமல் சிறிது பொருளாயினும் சிறிது காலமாயினும் வாய்த்துழி வாய்த்துழிக் கேட்க என்பதாம். அவையெல்லாம் ஈண்டி அறிவு நிறைக்கவே பெருமையும் நிறையுமாதலின், 'ஆன்ற பெருமை தரும்' என்றார்.

நல்லவை கேட்க என்றது இது. (சு)

கேட்டார் நல்லவை சொல்வ ரென்பது வருங்குறள் :

௪௧எ. பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லா ரிழைத்துணர்ந்
தீண்டிய கேள்வி யவர்.

(இ - ள்.) இழைத்துணர்ந்து - (பொருள்களைத் தாமும்) கற்றுணர்ந்து (அதன் மேலும்), ஈண்டிய கேள்வியவர் - நிறைந்த கேள்வி யுடையவர், பிழைத்துணர்ந்தும் - (தாம் உணர்வுழி ஒருகாற்) பிறழ உணர்ந்தா ராயினும், (பிறர்க்கு உரைக்குங்கால்) பேதைமை சொல்லார் - அறியாமைப்பாற் படுவனவற்றைச் சொல்லார். (எ - று.)

(இ - து.) கேள்வியறிவுடையார் அறியாமை யானவற்றைச் சொல்லார். (எ - ம்.)

பிழைப்ப எனற்பாலது பிழைத்து எனத் திரிந்து நின்றது. பேதைமைச் சொற்களைப் பேதைமை என்றது ஆகுபெயராதல் பற்றி. இழைத்துணர்தல் - கல்வியுணர்தல்; அஃதாவது கற்றுணர்தல் : எனவே, கற்றுணர்தல் ஆராய்ந்துணர்தலாதல் காண்க.

கல்வியறிவோடு கேள்வியறிவு முடையார் உணர்வு மயங்கார்; மயங்கினும் மயங்கிய பொருளைச் சொல்லார் என்பதாம். எனவே, கல்லார்க்கேயன்றி கற்றார்க்கும் கேள்வி இன்றியமையா தாயிற்று.

இவை நான்கு பாட்டாலும் கேள்வியுடையார் எய்தும் பயன் கூறப்பட்டது. (எ)

கேளாமையின் குற்றங் கூறுவன வரு மூன்று குறள்கள் :

௪௧அ. கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியாற்
றோட்கப் படாத செவி.

(இ - ள்.) கேள்வியால் - (அறிவுடையோர் சொல்வதைக்) கேட்டலினால், தோட்கப்படாத செவி - தொளைக்கப்படாத

செவிகள், கேட்பினும் - (தம் புலமான ஓசையினை மட்டும்) கேட்குமாயினும், கேளாத் தகையவே - (அது தானும்) கேளாத (செவிடாம்) தன்மையனவே. (எ - று.)

(இ - து.) அறிவுரைகளைக் கேளாதவர், செவிடரல்ல ராயினும் செவிடரே போல்வர். (எ - ம்.)

விலங்கு முதலியன போல ஓசையுணர்ச்சி யுடைமையானே உயிர்க்கு ஆம் உறுதிப் பயன் கிட்டாமையின் 'கேளாத்தகையவே' என்றார். ஏகாரம் தேற்றம். உள்ளத்தில் நூற்பொருள் நுழைதற்கு வழி செய்தலின் கேள்வியைக் கருவியாக்கி அதனால் 'தோட்கப்படாத செவி' என்றார். எனவே, கற்றறிந்தார் உரைகளைக் கேளாச் செவிகள் 'கேட்பினும் கேளாத் தகையவே' யாறுற்போலத் தொளையுடையன வாயினும் தொளையில்லன போலு மென்பதாயிற்று.

கேள்வியில்லாதார் செவிகள் செம்மையுடையனவல்ல என்றது. (அ)

அவர் வாயும் செம்மையுடைய தன்றென்பது வருங் குறள் :

சுககூ. நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய
வாயின ராத லரிது.

(இ - ள்.) நுணங்கிய - நுட்பமான (பொருள்களைக் கேட்டறிந்த), கேள்வியரல்லார் - கேள்வியறிவுடைய ரல்லாதவர், வணங்கிய வாயினராதல் - பணிந்தமொழியுடையராதல், அரிது - இல்லையாம் (எ - று.)

(இ - து.) கேள்வியில்லார்க்கு நாவடக்கமுமிராது (எ-ம்.)

கேட்கப்படும் பொருளின் நுட்பத்தைக் கேள்விமேலேற்றிக் கூறியது உபசாரம். வாய் கருவியாகுபெயராய் மொழியினை உணர்த்திற்று. பணிந்தமொழி - பணிவைப் புலப்படுத்தும் மொழி. மேல், 'கேள்வியவர் பேதைமை (புலப்படுக்குஞ் சொற்களைச்) சொல்லார்' (குறள் - சுகஎ) என்றார்; ஈண்டு அதனை எதிர்மறுத்துக்கேள்வியில்லார் தம்பேதைமை புலப்படுக்க ஏதுஞ் சொல்வார் என்பார் 'வணங்கிய வாயினராத லரிது' என்றார். அஃதன்றியும், கேள்வியில்லார் தம்மைத் தாமே புகழ்ந்து தஞ் சிறுமையும் புலப்படுப்பர் என்பதாயிற்று. என்னை? மேல் 'எனைத் தானு நல்லவை கேட்க வனைத்தானு - மான்ற பெருமை தரும்' (சுகசு) எனக் கூறிப் போக்கிப் 'பணியுமா மென்றும் பெருமை : சிறுமை - யணியுமாந் தன்னை வியந்து' (கூஎஅ) என்றாராகலின். இதனானன்றே பழமொழியும்,

"கற்றறிந்தார் கண்ட வடக்க மறியாதார்
பொச்சாந்து தம்மைப் புகழ்ந்துரைப்பர்—தெற்ற
அறைகல் லருவி யணிமலை நாட
நிறைகுட நீர்தளும்ப லில்." (உகக)

எனக் கூறுவதாயிற் றென்பது. 'கேள்வியரல்லால்' என்பதும் பாடம். இதற்கு 'ஏனையோர்' என ஒரு சொல் வருவித்துப் பொருள் கொள்ளப்படும்.

கேள்வியில்லாதார் உறுப்புக் குறைபாடிலராயினும் குறைபாடுளரே போல்வ ரென்றது இது. (௯)

அவர் மக்கட்பிறப்பினரேனும் விலங்குபோல்வர்; உயிருடையரேனும் இறந்தார்போல்வர் என்பது வருங் குறள் :

௪உ0. செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்க
ளவியினும் வாழினு மேன்.

(இ - ள்.) செவியின் - செவிகளால், சுவைஉணரா - (நுகரப்படும்) சுவைகளை உணராத, வாய்உணர்வின் - வாயால் (நுகரப்படும் ஊண்சுவை மட்டுமே உணரும்) உணர்வுடைய, மாக்கள் - மனவுணர்ச்சியில்லா மக்கள், அவியினும் - இறப்பினும், வாழினும் - இருப்பினும், என் - (உலகிற்காம் பயன்) யாது? (ஒன்றுமில்லை) (எ - று.)

(இ - நு.) கேள்வியில்லாதார் இருந்தும் பயன்படார்; இறந்தும் பயன்படார். வாழ்க்கையின் சிறப்பு உணர்ச்சியின் ஏற்றத்தால் அளந்தறியப்படுவது. ஐம்புலனால் அடையத் தக்க உணர்ச்சிகளைச் சிறுகவும் பெருகவும் ஒருங்கேயுந் தனித்தும் நேர்ந்த நேர்ந்தவாறு நுகர்வதே வாழ்க்கை யாகின்றதன்றிப் பிறிதென்னை? இவ்வுணர்ச்சி யின்றேல் உயிருடைய மக்கட்கும் உயிரறு பாவைக்கும் வேறுபாடு இல்லையன்றே. ஆகவே, வாழ்க்கை யென்பது உணர்ச்சி வயப்படுத லாயிற்று. எனவே, வாழ்க்கையின் ஏற்றமுந் தாழ்வும் மிகுதியுங் குறைவும் அவ்வுணர்ச்சியா லளந்தறியப்படுத லியைவதொன்றேயாம். பண்டைத் தமிழறிஞரெல்லாரும் ஒருவனுக்கும் ஒருத்திக்குமிடையே அன்பொடு பொருந்திய இன்பவொழுக்கத்தைச் சிறப்பித்துக் கூறியதெல்லாம் ஐம்புல உணர்ச்சியும் ஆண்டு ஒருங்கே பெறக் கிடத்தலினா லன்றே? என்னை? நந்தந் தெய்வப்புலவரும், 'கண்டு கேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு - மொண்டொடி கண்ணே யுள' (கக0க) என்றாராகலி னென்பது. அற்றே லைம்புல நுகர்ச்சியைத் துறக்குந் துறவினைச் சிறப்பித்ததென்னையோ

வெனின், அஃது இன்பப் பான்முகத்துப் போக்கிக் கூறப்படுமாதலின் ஈண்டு விரித்தற்கிடம் பெறுதென்பது. ஈண்டறியற்பாலது ஐம்புலவுணர்ச்சியான் வாழ்க்கை அளக்கப்படும் என்பதே. அஃதுடன்பாடாயின், அவ்வைம்புல உணர்ச்சியும் உள்ளத்தோடியைந் தியங்குவது முடன்பாடாதற் கிழுக்கில்லை. அவ்வுள்ளந்தான் மக்கட்குச் சிறப்பினமைந்ததோர் புலனாயிற்று. இப்புலன் ஏனை ஐம்புலன்களை இயக்கியும், அவற்றால் இயக்கப்பட்டும், அவற்றின் துணையின்றித் தானே இயங்கியும், அவற்றின் எல்லையில் தானடங்காது தன்னெல்லையில் அவற்றை யடக்கியும் போதரும் அரும் பேராற்றலுடைய தொன்றாதலும் பலர்க்கும் தெரிந்ததோர் உண்மை. உள்ளத்தின் இவ்வாற்றலை மிகுவித்து அதன் வழியே ஐம்புலவுணர்ச்சியையும் இயக்குவது கல்வியும் அதனோடியைந்த கேள்வியுமேயாம். அம்முறையீண்டு விரிப்பிற் பெருகும் அவ்வியக்கமே சொற்சுவை யெனவும் பொருட்சுவையெனவும் வழங்கப்படும். சொல்லானன்றிப் பொருளாமாறில்லையாதலின், சொற்சுவை பொருட்சுவையிரண்டுக்கு மிடமாவது சொல்லாயிற்று. அச்சொல் செவியாற் கேட்கப்படுதலின் சொற்சுவை பொருட்சுவைகளை நுகர்தற்கு வாயில் செவியானமைபற்றிச் 'செவியிற் சுவை யுணரா' என்றார். வாழ்க்கைப் பயன் நிரம்ப எய்தற்கு இன்றியமையாத இவ்வுணர்ச்சி இல்லாதார் வாழ்ந்தும் பயனின்மையில் அவர் 'அவியினும் வாழினுமென்' னென்றார். மனத்தொடுபட்டுப் பலபட விரியும் பெற்றியதாய் மக்கட்கே சிறப்பினுரிய இச்சுவை போலாது மனத்தொடுபடாது விலங்கு முதலிய பிறவுயிர்கட்கும் பொதுவாயுள்ள ஊண்சுவை யொன்றுமே யுடையார் மக்களாய்ப் பிறந்தாரேனும் விலங்கோ டொப்பர் என்பார் 'வாயுணர்வின் மாக்கள்' என்றார். என்னை? 'மாவு மாக்களு மையறி வினவே' (தொல்-மரபியல்-௩௨) என்பதாகலான். 'வாயுணவின்' என்பதும் பாடமாம்.

இவ்வதிகாரத்தில் முதல் இரண்டு குறள்களால் கேள்வியது சிறப்பும், அடுத்த குறளால் கேள்வியுடையாரது சிறப்பும், அடுத்த நான்கு குறள்களால் கேள்வியுடையா ரெய்தும் பயனும் இறுதி மூன்று குறள்களால் கேள்வியில்லாமையின் குற்றமும் கூறப்பட்டன.

(தொடரும்)

கள்ளும் சூதும்

[செல்லூர்க்கிழார் திரு. செ. ரெ. இராமசாமிபிள்ளை]

உலகம் தோன்றிய நாள்தொட்டு பகலும் இரவும் மாறி வருவதும் போவதுமாக இருக்கின்றன. இருட்டு என ஒன்றுண்டேல், வெளிச்சமுமுண்டு. நன்றுண்டேல், தீமையும் அதன் பக்கலிலேயே உளது. இவை போன்றே நலத்தைக் கெடுத்தற்குக் கள்ளும் சூதும்; இவைகள் ஒவ்வொன்றுக்கும் தொடர்புண்டு.

பழங்காலத்தில் இக்கள்ளினை அரசர்முதல் கீழ்மக்கள் வரை எளிதாக உண்டு களித்துவந்தனர். இதற்குச் சான்று சங்க இலக்கியங்கள் பகர்கின்றன. சங்க காலத்திருந்த ஔவை மூதாட்டியார், தம்மைப் போற்றிச் சிறப்புச் செய்த அதியமான் நெடுமான் அஞ்சி தன் பருவுடல் நீத்தகாலை அவன் தமக்குச் செய்த சிறப்புக்களுள், இக்கள்ளினைத் தமக்குக் கொடுத்துத் தானும் உண்ட செயலையே பாராட்டி இரங்க லுரையாக,

'சிறியகட் பெறினே எமக்கீயு மன்னே
பெரியகட் பெறினே
யாம்பாடத் தாம் மகிழ்ந்துண்ணும் மன்னே'

எனக் கூறி வருந்துவாராயினர். முற்கால நூல்களிலிருந்து பிற்கால நூல்கள் வரை இதனையே யெடுத்துப் பாராட்டிப் பேசுகின்றன. அதன் சுவையும், அதை உண்பதால் உணர்வு இழந்த நிலைப்பண்புமே அவற்றைப் பாராட்டிப் பேச மனத்தை உந்துவ வாயின. வள்ளுவர் பெருமானே தம் அறநூற் பகுதியாகிய காமத்துப் பாலில்,

'ஒளித்தக்க இன்னா செயினும் களித்தார்க்குக்
கள்ளற்றே கள்வநின் மார்பு'

'உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
கள்ளுக்கில் காமத்திற் குண்டு'

எனத், தலைவி தோழிகள் கூற்றாக இன்பத் திளைப்புக்கு உவமையாக அமைத்துக் கூறுவாராயின், இக்கள்ளின் ஆட்சியை என்னெனப் பகர்வது? இதற்கு அடிமைப்பட்ட, அரசர் அறிஞர் முதலியோர் எண்ணடங்கார். இதனை உண்டார் எவ்வளவு அறிஞராயினும் செல்வராயினும் தம் அறிவு சிதைய உணர் விழந்தவராகி தத்தம் அலுவல்களிலும் கடமைகளிலும் தவறு

தலுடையராகின்றனர். எனவே, அவர் உணர்விழந்த பிண்டமாய் மக்களாய்ப் பிறந்த மாண்பினையுணராதவர்களாய்க் குடிப்பது உறங்குவது களிப்பது இந்த அளவோடு அவர் வாழ்வு கழிந்து விடுகின்றது ஆகலின், இதனை விலக்கி யொழித்தாலே மக்கள் பயன்பெற முடியுமென மூதறிஞர் கருதினர். அது கருதியே பல நூல்கள் மூலம் இதன் தீமையைக் கண்டித்து இதனை விலக்குமாறு அறிவுறுத்துவாராயினர்.

சூதென்பது, அரசர் அறிஞர் தொழிலாளர் முதலியோர், மன ஒய்வுக்காக - மனக்கவலையை மாற்றுதற்காக - உழைப்புக் கடுமை குறைதற்காக - அமைத்த ஒருவகை விளையாட்டு. அது போர்முறையை ஒட்டி அமைக்கப்பட்ட கதைபோன்ற ஒன்றே என்று எண்ணற்கேற்ற தன்மையையுடையதாக அமைந்திருக்கின்றது. இப்போக்கில் அமைந்த சூதாட்டமே சாதுரங்கம், சொற்கேட்டான், தாயம் போன்ற விளையாட்டுக்கள். பிற்காலத்துவந்த சீட்டாட்டமும் இத்தகைய வொன்றே. இச்சூது, வரவர ஒருவன் உரிமையை மற்றவன் பறிக்கின்ற கொள்ளைத் திருட்டாக மாறி விட்டது. அதனால் இதுவும் கள்ளுண்டலால் வரும் தீமையைப்போல் அதிற் சிக்குண்ட மக்களைத் தன் வயப்படுத்தி அதிலேயே கருத்தை முனையச்செய்து பண்பொடுபட்ட வாழ்க்கையையும் நீராடல் உண்ணல் உறங்கல் முதலிய அன்றாடக் கடன்களையுங்கூட, நிகழ்த்தவிடாது தன்பால் ஈர்த்து மக்களை ஒன்றெய்தி நூறிழக்கச் செய்யும் கொடும்பாடுடையது. இதனுன், இதனைக் கள்ளொடு ஒன்றுபடுத்தி அறநூலார் விலக்க முற்பட்டனர். சூதால் பல கேடுகள் நிகழ்ந்ததைப் பண்டும், நிகழ்வதை இன்றும் தெளிந்து வருகின்கின்றோம். முற்காலத்து நளன், தருமன் காதைகளும் தற்காலத்துக் குதிரைப்பந்தயம் சீட்டாட்டம், 'ஜரிசு லாட்டரி', கதைப்போட்டி, குறுக்கெழுத்துப் போட்டி முதலியனவும் நமக்குச் சான்று காட்டுகின்றன. இதனால் எவரோ ஒருவர் வாழப் பலர் கெடுகின்றனர்; இதனால் பொருளிழப்பும், ஆர்வம் மிகைப்பீட்டுப் பலர் தம் அறிவுநிலை மாறிப் பைத்தியம் பிடித்து இறத்தலையும் காண்கின்றோமன்றே. ஆகவே, கள்ளும் சூதும் மக்களின் மாண்பைக் குலைக்க வந்த பேய்கள் எனக் கூறின், மிகையாகாது. ஆகவே, இதனைப் பண்பின் தலைப்பிரியாத பேரறிஞர், சமயக்கணக்கர், ஒழுக்கம் ஒம்பும் உயர்வாளர், மற்ற யாவரும் ஒருங்கே கடிய முற்பட்டனர், கடிந்தனர்.

இவைகளின் தீமையை நுனித்தறிந்த பேரறிஞர் சமயக் கணக்கர் மதிவழி கூறாது உலகியல் கூறிப் பொருளிது

வென்ற வள்ளுவர் எவ்வாறு வகுத்து விலக்கிக் கடிந்துள்ளனர் என்பதை இனிக்காண்பாம்.

வள்ளுவர் ஓர் அறநூல் அறிஞர். அவர் உலகமாந்தர் உய்தற்காக வழிகாட்டி விதிவிலக்களித்த பெருந்தகையாளர். அவர் உலகு பயன்கருதி ஆக்கிய இனிய நூல் திருக்குறள். அதில் மூவ்வகைப் பால் வகுத்து அவைகளில் தாம் உரைத்த அறத்தை-உலகியல் நெறியை - இல்லறக்கிழமையின் ஏற்றத்தை-எடுத்துணர்த்திய முதுபெரும் புலவர் பெருந்தகை.

திருக்குறளில் வரும் பகுப்புகள் மூன்று ; அவை : அறம், பொருள், இன்பம் என்பன. முதற்கண் அறநெறியினின்று வழுவாது கடனாற்றி உலகியலோடொத்து வாழ்தலை விளக்கிக் கூறினர். அஃது அறத்துப்பால் எனப்பெறும். அறம் செய்தற்கும் உலகில் வாழ்தற்கும் துணைக்கருவியாக நின்று உதவுவது பொருள். பொருளை ஈட்டும் நெறியும், அதை ஈட்டுங்கால் வரும் இடையீடுகளும், அவைகளை விலக்கும் முறையும், பிறவும் வகுத்துக்கூறிப் பொருளின் இன்றியமையாத பகுதியை உணர்த்தி வழிகாட்டிய நெறியாகும். இஃது பொருட்பால் எனப்பெறும். அறம் செய்யப்படும் முறையில் செய்யினும் அதற்கேற்ற முறையில் பொருளீட்டும் நெறி திறம்பட வாய்ப்பினும் அவைகட்கேற்ற இன்பம் அமைதல் வேண்டும். அவ்வின்பம் பெண்மை ஆண்மைப் பண்புகளினிடையே சுரந்து வருவது. இவ்வியல்பு வாய்ந்த ஆண்மகனும் பெண்மகளும் ஒன்று பட்டுப் பிரிவின்றி வாழும் வாழ்க்கைமுறையை விரித்துரைப்பதே காமத்துப்பால் எனப்பெறும்.

இத்தகைய அறநூலின் பொருட்பாலில் கட்டுரைப்பன கள்ளும் சூதும் என்னும் தனித்தனி அதிகாரப்பகுதிகள். கள்ளினால் வரும் கேடுதலையும், சூதினால் எய்தும் சீர்கேட்டையும் பல வகைகளில் தெள்ளத்தெளிய எடுத்துக்காட்டி, அவைகளை அறவே நீக்குமாறு வற்புறுத்திக் கூறுகின்றார். இவர், பொருளியல் வழியாகச் சென்று கொண்டிருக்கும் ஒருவனை அந்நெறியில் முட்டின்றிச் செல்லாதவாறு விலக்குவன இவ்விவையென முறைவைப்பாக வைத்து அமைத்துரைத்திருப்பதன் ஒட்பம், வள்ளுவரின் மதிவன்மையைக் காட்டுவதாக அமைந்துள்ளன. அவை பெண்வழிச்சேறல், வரைவின் மகளிர், கள்ளுண்ணாமை, சூது என்பன. இவையிற்றுள் முதற்கண்ணின்ற பெண்வழிச்சேறல் என்பது, ஒரு ஆடவனுக்கு அமைந்த வாழ்க்கைத்துணையாகிய இல்லாள், அவன் வழி ஒழுகற்பாலள் அன்றி, அவள் வழி கணவன் ஒழுகுதல் சாலாது. அதற்கேற்ற இயற்கையும் அவ்

வாறே. எனவே,'இதனை ஈங்கே விரித்தற்குரியதன்று. தனியாக ஆராய்ந்து முடிபு காண்டற்பாலது. அதற்கடுத்தபடி நிற்கும் அதிகாரம் வரைவில் மகளிர் என்பது. இது, பெண்மை இயல்பு திறம்பி ஒருவன் வழி ஓடாது இவர் தக்கார் தகவிலரென ஆராயாது பொருள் தருவார்க் கெல்லாம் தம் பெண்மை நலத்தை விற்று வாழும் தந்நெறிப் பெண்கள் இயல்பு. இது பொருளீட்டுவான் பொருள்களையெல்லாம் கொள்ளைகொண்டு அழிக்கும் இயற்கை. எனவே, இவர் கூட்டுறவு கூடாதென்பது. இதனையடுத்து நிற்பது கள்ளுண்ணாமை. தன் மனையாளுக்குக் கீழ்ப்படிந்தொழுகி, அதற்கடுத்துப் பெண்மை இயல்பில்லாத பொதுமகளிர் காமத்தை நச்சிவாழ்வது அறிவுக்கண்ணை அழிக்கும் நீர்மைத்து. அவ்வறிவைத் தலையெடுக்காது செய்வது கள்ளுண்பது. அக்கள்ளுண்டலால்வரும் கேட்டினும் பெருங் கேடெய்துவிப்பது சூது என முறையே வகுத்துக் கள்ளுண் ணாமையை முதலினும் அதற்கடுத்துச் 'சூது' என்னும் அதி. காரத்தையும் வைத்திருப்பதன் நோக்கம், இவைகள் கூடாதென் பதும் இவைகள் ஒன்றுக்கொன்று இனமானவை யென்பதும் விளக்கற் பொருட்டேயாமெனத் தெளிக.

கட்குடியின் தீமையை வள்ளுவர் மிக அழுத்தந் திருத்த மாகக் கண்டிக்கின்றனர். அவர் எடுத்த எடுப்பிலேயே கள்ளின் மீது விருப்பங் கொண்டுள்ளவர், 'பிறரால் மதிக்கப்படார் ; தம் புகழையும் இழந்து விடுவார்' என்று கூறுகின்றார். கள்ளில் விருப்பம் கொள்ளுவோர் பிறரால் மதித்தற்கருகரல்லா தாரோடு, தம் பெயரும் கெடுமென்று சொல்லாமற் சொல்லிக் கள்ளுண்ணாமையை வற்புறுத்துகின்றார். பின்னரும்,

'ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என் மற்றுச்
சான்றோர் முகத்துக் களி'

எனவும்,

துஞ்சினார் செத்தாரின் வேறல்லர்

எனவும், இறுதிக் குறளில்,

'கள்ளுண்ணாப் போழ்தில் களித்தானைக் காணுங்கால்
உள்ளான்கொல் உண்டதன் சோர்வு'

எனவும் கட்டுரைப்பது, ஒருவன் கள்ளுண்டு, களித்து வெறி கொண்டு பிதற்றுதலைப் பெற்ற அவன் தாய்கூடப் பொறுக்கமாட் டாளே, அப்படியிருக்க இவன் நல்லோர் காணக் கள்ளுண்டு வெறியாருவது அவர்கட்கு எவ்வளவு வெறுப்புத் தருமெனக் கள்ளுண்போரையே கேள்விகேட்டு அதை உண்பதை விடுமாறு

நயம்பட வேண்டுகின்றார். பின்பு அவர் கள்ளுண்டு உணர்வற்றுக் கிடப்பதை வெறுத்து நோக்கிக் கள்ளுண்போர் உறங்குவோரினும் செத்தோரினும் வேறுபட்டவரல்லர்; எந்தக் காலத்தும் கள்ளுண்போர், நஞ்சை உண்டு தமக்குக் கேடுவிளைத்துக் கொள்ளும் அறியாதவரோடொப்பர் எனக் கட்டுரைத்து விளக்குகின்றார். பின் பலபட இடித்துக்கூறி அதனை விட்டுத்தொலைக்க வேண்டிய முதன்மையையும் எடுத்துக்காட்டுமூலம் 'ஒருவன் தான் கள்ளுண்ணாது நல்லறிவோடிருக்கும் காலத்தில் கள்ளுண்டு மயங்கிக் கிடப்பவன் ஒருவனைக்கண்டு, நாமும் கள்ளுண்டால் இவன் நிலையில்தானே மயங்கிக் கிடப்போம் என எண்ண மாட்டானோ?' என அவன் தன்னைக்கூடச் சிந்தித்து எண்ணாத மதியீனத்தை விளக்கி யெடுத்துக் காட்டுகின்றார். இதனோடு அவர் கள்ளுண்டலால்வரும் தீமையை விளக்கிவிட்டு, அதற்குத் துணையாக அமைந்த சூதை யெடுத்துக் கொண்டு விளக்குகின்றார். அதில்,

> 'வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉம்
> தூண்டிற்பொன் மீன்விழுங்கி அற்று.'

ஒருவன் வெற்றியே பெறுவதாயினும் சூதாட்டத்தை விரும்பாதிருப்பானாக. வென்ற அவன் வெற்றிமேம்பாடும் தூண்டின் முள்ளிலுள்ள இரையை விழுங்கித் தன் உயிரிழக்கும் மீன் தன்மையனாவன் எனச் சூதால் பெற்ற பொருளினால் வரும் கேட்டினை விளக்கினார். பின்னரும்

> 'சிறுமை பலசெய்து சீரழிக்கும் சூதின்
> வறுமை தருவதொன் றில்'

எனவும்,

> 'அகடாரார் அல்லல் உழப்பர் சூதென்னும்
> முகடியான் மூடப்பட் டார்'

எனவும்,

> 'உடை செல்வம் ஊண்ஒளி கல்வியென் றைந்தும்
> அடையாவாம் ஆயம் கொளின்'

எனவும் கூறும் குறள்களில் சூதினால் பல துன்பங்களும் ஒருங்கே தொடருமென்றும், இதனை மேற்கொண்டார் உடுக்கும் ஆடையும் அதைப் பெறற்கு வேண்டும் பொருளும் உண்டற்குச் சோறும் தன் நல்ல பெயரும் கல்வியும் ஒருங்கே இல்லாதவராய் அலமந்து ஏங்குவரென்றும், அதனைக் கைவிட்டு நன்னெறியிற் படரவேண்டுமென்றும் அறிவுறுத்துகின்றார், நம் வள்ளுவர் பெருமான். ஆகவே, மக்களுடல் பெற்ற நாம் வள்ளுவர் போன்ற வழிகாட்டும் வான் பொருட்செல்வர் ஆணை

வழி நின்று கள்ளையும் சூதையும் ஒழித்து அறிவுக்கண்ணராய் ஒழுகுவோமாக.

இதுகாலை நம் சென்னைமாநில அரசியலார் வள்ளுவர் (காந்தி) வகுத்த ஆணைவழி நின்று 'மதுவிலக்குச் சட்டம்' மூலம் வெளிப்படைக் குடியை ஒழித்துள்ளனர். 'பந்தயம்' 'குறுக் கெழுத்துப் போட்டி' போன்ற சூதுமுறைகளையும் விரைவில் ஒழிப்பார்களாக. அதனையொட்டி புகைக்குடியை அறவே ஒழித்துக்கட்ட வேண்டுவது முதற்பெருங் கடப்பாடாகும். வள்ளுவர் கள்ளுண்ணாமை அதிகாரத்தினுள் 'ஒருமொழி ஒழிதன் இனங்கொளற்கு உரித்தே' என்னும் உரைப்படி 'புகையுண்ணாமை' அடங்கிக் கிடப்பதை ஓர்க.

புகைக்குடியால் இன்று இளைஞருலகம் நாளுக்குநாள் கேடுறுகின்றது. இப் புகைக்குடி குடிக்காத இளைஞரே இல்லை யெனலாம். இக்கொடிய குடியாகிய நச்சுப்பாம்புக்கு இளை ஞருலகம் இரையாகின்றது. இதனை அரசியலார் சட்ட மூலம் தடுத்தல், ஒழுக்கத்தையும் இளைஞர்களையும் பாதுகாக்கும் வழி யாகும். இதனால் இளைஞர் முகம் வெளுக்கின்றது; நெஞ்சம் ஈரப்பசை அருகுகின்றது; கண்கள் செந்நிறம் பெறுகின்றன; இவர் இருமலுக்கு ஆளாகி விரைவில் மண்ணுலக வாழ்வை மறந்து செல்ல இயல்கின்றது. தம் நலங் கருதியாவது இளைஞ ருலகு இதை விட்டுவிட்டுத் திரும்பித் திருந்துமென நம்புகின் றோம். வள்ளுவர் வாயுறை வாழ்த்தும் இன்னனபோன்ற கொடிய வழியை நீக்குமாறே முழங்குகின்றது. அதன் வழியில் நிற் பதே சாலச் சிறந்ததாகும்.

இப் புகைக்குடி உடலைத் தூய்மையில்லாது ஆக்குதலோடு, அறிஞர்களால் வெறுக்கும் நிலை உண்டாக்குகின்றது. இளைஞ ருலகமே! நுட்கட்கு எச்சரிக்கை செய்து ஒன்று வேண்டுகின் றேம்! புகைக்குடி நுங்கட்கு நன்மையைத் தருகின்றதா? நெஞ் சில் கையை வைத்துக் கூறுங்கள்! நும் நெஞ்சே 'நன்மை' இல்லை யென்று சான்றுகூற, மடிதற்று முன்னிற்கும்! தொழிலாளர் பெருமக்களே! நீவிர் நாள்தோறும் உழைத்து உழைத்து ஓடா கிப் பெற்ற காசைக் கரியாக்காதீர்! புகைக்காதீர்!

ஓய்வுக்காலத்தில் நல்ல கதைகள் படித்தலினும், அறிஞர்கள் வரலாற்றை அறியும் துறையினும் கால்கொள்ளுங்கள்! திரைப் படத்தால் சீரழியாதீர்! அதனால் நும் காசும் கண்ணும் கெடுகின் றன என்பதை மறவாதீர்! மறவாதீர்! என வேண்டுவல். அன்பு தழைக. கள்ளும் சூதும் குடிப்பழக்கமும் நீங்குக. நலங்கள் பெருக நாடு.

மன்மத ஆண்டில்

பிள்ளையார் சதுர்த்தி, நவராத்திரி, கந்தர்சட்டி.

[டாக்டர், கணியர், திரு. இ. மு. சுப்பிரமணியபிள்ளை]

(1) *பிள்ளையார் சதுர்த்தியை ஆவணியிலும், (2) நவராத்திரியைப் புரட்டாசியிலும், (3) கந்தர் சட்டியை ஐப்பசியிலும் தான் கொண்டாட வேண்டும். இவ்விரதங்களை இன்ன என நன்றாக ஆராய்ந்து தக்க ஆதாரங்களுடன் முடிவு செய்வோம்.*

1. பிள்ளையார் சதுர்த்தி

பிள்ளையார், விநாயகர், விக்னேசுவரர் என்பன சிவபெருமானுடைய மூத்த திருமகனாரைக் குறிப்பன. திருமகனார் என்பதே பிள்ளையார் என்று வழங்கப் பெறுகிறது. விநாயகர் என்ற சொல் தலைவர் என்று பொருள்படும். சிவகணங்களின் நாயகர்தான் விநாயகர்; அதனால் அவர் கணபதி என்றும் அழைக்கப் பெறுகிறார். பிள்ளையாருடைய வரலாறுகளை யெல்லாம் கூறுவது விநாயக புராணம். அது அவருடைய பிறப்பைப் பற்றிப் பின்வருமாறு கூறுகிறது:

"இவ்வாறு தலைவர் அவதரித்த வைகல்
பந்தமறும் **ஆவணித் திங்களின் வளரும் சதுர்த்தி** எனப்பகர்வர் அற்றால்
அந்தமதிச் சதுர்த்தியிற் பூசிப்பவருக்கு உறுபயன் ஆர் அளக்கவல்லார்."

ஆவணி மாதம் வளர்பிறைச் சதுர்த்தியில் பிள்ளையார் பிறந்தருளினார். அதனால் அந்த நாள் பிள்ளையார்சதுர்த்தி என்றும் விநாயக சதுர்த்தி என்றும் பெயர்பெற்றுத் திருநாளாக நாடெங்கும் கொண்டாடப்படுகிறது. அந்த நாளிலே பிள்ளையாரைப் பூசிப்பவருக்குக் கிடைக்கும் பயன் இவ்வளவு அவ்வளவு என்று அளக்க முடியாதது. விநாயகப் பெருமானே கூறுவதாக மற்றோரிடத்தில் அப்புராணம் பின் வருமாறு கூறுகின்றது.

"**சிங்கமாமதியிடைச்** சேர்**முன்பக்கத்துத்**
தங்கும்நம் **சதுர்த்தி**."

சிங்கமாமதி *என்பது* **ஆவணி** *மாதம்; முன்பக்கம் என்பது* **வளர்பிறை.**

திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த கவிச் சக்கரவர்த்தியாகிய கச்சியப்ப முனிவர் பாடியது விநாயகபுராணம். இங்ஙனமாகிய விநாயகபுராணப் பிரமாணங்களினாலே பிள்ளையார் சதுர்த்தியை ஆவணி மாதத்தில் வரும் வளர்பிறைச் சதுர்த்தியன்றுதான் கொண்டாட வேண்டும் என்பது தெளிவாகிறது. செல்வ வளம் நிரம்பிய பிள்ளையார் கோவில்களிலே பிள்ளையாருக்குத் தேர்த் திருவிழாக் கொண்டாடப்பெறுகிறது. பிள்ளையாருக்குத் தேர்த் திருவிழாவை எந்த நாளிற் செய்யவேண்டும் என்று சுவாயம்பு ஆகமம் விநாயகோத்சவப் படலத்தில் விதிக்கின்றது. அதனை விளக்குவோம்.

" அதவக்ஷ்யே விசேஷேண விக்னேசோத்சவம் உத்தமம்
சர்வபாபஹரம் புண்யம் சர்வலோக சுகாவஹம் "

(இதன் பொருள்.) " இனி அனைவருக்கும் சுகத்தைத் தருவதாயும் பாவங்கள் அனைத்தையும் போக்குவதாயும் மேலானதாயும் உள்ள புண்ணியமான விநாயகோத்சவத்தைச் சிறப்பாகக் கூறுகிறேன்."

" ஆதௌ தீர்த்தம் விநிச்சித்திய தத்பூர்வே பஞ்சமேபிவா
சப்தமே நவமேவாபி திருதீயே த்வஜம் ஆரபேத்."

(இ - ள்.) முதலாவது தீர்த்த தினத்தை நிச்சயித்துக் கொண்டு அதற்கு முன் மூன்றாவது தினத்திலாவது, ஐந்தாவது தினத்திலாவது, ஏழாவது தினத்திலாவது, ஒன்பதாவது தினத்திலாவது கொடியேற்றம் செய்ய வேண்டும்.

" சிராவணே விக்நராஜஸ்ய சதுர்த்யாஞ்ச ரதோத்சவம்
தத்திநே தீர்த்தகிருத்யஞ்ச பஞ்சம்யாம் வா விசேஷத "

(இ - ள்.) சிராவண (ஆவணி) மாதத்தில் விநாயகருக்குச் சதுர்த்தியில் தேர்விழாச் செய்யவேண்டும். அதே நாளில் தீர்த்த விழாவையும் செய்யலாம். பஞ்சமியிலும் தீர்த்தோத்சவத்தைச் செய்யலாம் என்பது மற்றொரு பட்சம்.

மேலே கண்ட சிவவாக்காகிய சுவாயம்புவாகம வாக்கியங்களின்படி ஆராய்ந்தால் முதலில் ஆவணி மாதத்தில் வளர்பிறைச் சதுர்த்தியைத் தீர்மானித்துக் கொண்டு அன்று பிள்ளையாரைக் குறித்து விரதம் இருந்து திருவிழாக் கொண்டாட வேண்டும் என்பதும், அன்றுதான் தேர்த்திருவிழா என்பதும், அன்று அல்லது மறுநாள் தீர்த்தவாரி நடத்தவேண்டும் என்பதும், இத்திருவிழாவை ஒன்பது நாள், ஏழு நாள், ஐந்து நாள், அல்லது மூன்று நாள் கொண்டாடலாம் என்பதும் விளங்குகின்றன. ஆகையால், மன்மத ௵ ஆவணி மீ 5௳ ஞாயிறன்றுதான்

பிள்ளையார் சதுர்த்தியைக் கொண்டாடுவது நல்ல பல பலன்களைத் தருவதாகும் என்ற உண்மை நிலைபெறுகின்றமை காண்க.

ஆவணி மாதத்திற் பிறந்தவர்களுக்கு ஆவணி மாதத்திலேயேதான் பிறந்தநாள்விழாக் கொண்டாடுகின்றோம்; ஆவணி மாதத்தில் இறந்தவர்களுக்கும் இறந்தநாள்விழாவை ஆவணி மாதத்திலேயே கொண்டாடுகின்றோம். நம் நெல்லையப்பர் கோவிலிலும் திருச்செந்தூரிலும் ஆவணிப் பெருவிழா ஆவணி மாதத்திலேதான் நடைபெறுகின்றது. நெல்லையப்பர் கோவிலில் ஆவணிப் பெருவிழா நடைபெறும் இடையிலேதான் பெரும்பாலும் பிள்ளையார்சதுர்த்திவிழாவும் நடைபெறும்; நெல்லையப்பர் கோவில்விழா ஆவணி முதல் வாரத்தில் முடியுமானால் ஆவணிக் கடைசி வாரத்தில் பிள்ளையார் சதுர்த்தி வரும்.

நம் நாட்டில் இக்காலத்தில் சைவர், வைணவர், சுமார்த்தர், கிருத்தவர், மகமதியர் ஆகிய பல மதத்தினர் வாழ்கின்றார்கள். இவர்களில் கிருத்தவர் தமக்குச் சனவரி, பிப்ரவரி முதலிய பன்னிரண்டு நிலையான மாதங்களை வைத்திருக்கின்றார்கள்; அம் மாதங்களில் அவர்கள் சம் திருவிழாக்களைக் கொண்டாடுகின்றார்கள். மகமதியரோ முகரம் முதலிய பன்னிரு மாதங்களை உடையர்; அம்மாதங்கள் சந்திரனுடைய வளர்ச்சி தளர்ச்சியைக் கொண்டு கணிக்கப்படுகின்றன; அமாவாசை கழிந்த மூன்றாம் பிறையிலே அவர்களுடைய மாதம் தொடங்குகின்றது; அதனால் அவர்களுடைய பன்னிரண்டு மாதங்களும் சேர்ந்த ஆண்டு ஒன்றுக்குச் சற்று ஏறக்குறைய 355 (முந்நூற்று ஐம்பத்தைந்து) நாட்களே உண்டு. இதற்குச் சாந்திரமான (அதாவது சந்திரனுடைய) ஆண்டு என்பது பெயர். மானம் என்பது அளவு. காலத்தைச் சந்திரனைக் கொண்டு அளந்து கணக்கிடுவது சந்திர மானம்; சூரியனைக் கொண்டு அளந்து கணக்கிடுவது சூரிய மானம். இவை முறையே சாந்திரமானம், சௌரமானம் என்றும் பெயர் பெறும். சூரியனைப் பூமி ஒரு முறை சுற்றி வருவதற்கு 365¼ நாள் ஆகிறது; பூமிதான் உண்மையில் சூரியனைச் சுற்றிவருகிறது; ஆனால் காட்சிக்குப் பூமி அசையாமல் இருப்பதுபோலவும் சூரியனே பூமியைச் சுற்றிவருவது போலவும் காணப்படுகிறது. அதனால் பூமிமானம் என்னப் பெறவேண்டியதே சௌரமானம் என்று அழைக்கப்படுகிறது. சௌரமான மாதங்கள் சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி என்பன.

மகமதியர்களுடைய சாந்திரமானம் வேறு எதையும் பற்றாது தனித்து இயங்குகின்றது. சௌரமானச் சித்திரை மாதம்

முதல் நாள் சாந்திரமான மொகரம் முதல் நாள் தொடங்குமே யானால் அது மறுபடி சித்திரை மாதம் முதல் நாளில் தொடங்கு வதற்கு அறுபத்தைந்து ஆண்டுகள் கழிய வேண்டும். மகமதி யர்களைப்போலவே சுமார்த்த மதத்தினரும் சாந்திரமானிகளே. மகமதியர் மாதம் வளர்பிறை மூன்றும் பிறையில் தொடங்கு கிறது; சுமார்த்தர் மாதமோ வளர்பிறை முதற் பிறையில் (பிரத மையில்) தொடங்குகின்றது. 1. மொகரம், 2. சபர், 3. இரப்பி லவ்வல், 4. இரப்பிசானி, 5. சமாதிலவல், 6. சமாதிசானி, 7. இரசப்பு, 8. சாபான், 9. இரம்சான், 10. சவ்வால், 11. சில்காது, 12. சில்கேது என்று மகமதிய மாதங்கள் பன்னிரண்டு; மகமதிய ஆண்டு 354 நாள் 48 நாழிகை 8 விநாடி 36 தற்பரை கொண்டது. இதனைப் போன்றதே சுமார்த்தர்க ளுடைய ஆண்டும். ஆனால் சுமார்த்தர்களுடைய மாதங்களுக்குப் பெயர் இல்லை. அவர்கள் சித்திரையைச் சைத்திரம் என்றும், வைகாசியை வைசாகம் என்றும், ஆனியைச் சேட்டம் என்றும், ஆடியை ஆசாடம் என்றும், ஆவணியைச் சிராவணம் என்றும், புரட்டாசியைப் பாத்திரபதம் என்றும், ஐப்பசியை ஆச்வீசம் என் றும், கார்த்திகையைக் கார்த்திகம் என்றும், மார்கழியை மார்க்க சிரம் என்றும், தையைப் புசியம் என்றும், மாசியை மாகம் என் றும், பங்குனியைப்பால்குனம் என்றும் திரித்து வழங்குகின்றனர். சுமார்த்தர்கள் தமது சைத்திரம், வைசாகம் முதலிய மாதங்களை மகமதியருடைய மொகரம் முதலிய மாதங்களைப் போலத் தம் போக்கில் விட்டுவிடாமல் சௌரமான சித்திரை, வைகாசி முத லிய மாதங்களுடன் பிணைக்கின்றார்கள். அவர்கள் தமது சைத் திர மாதம் சித்திரையுடனும், வைசாக மாதம் வைகாசியுடனும் இங்ஙனமே ஏனைய மாதங்களும் அவ்வவற்றிற்குரிய சௌர மாதங் களுடனும் சேர்ந்திருத்தல் இன்றியமையாதது என்று கொள்ளு கின்றனர்; அவ்வாறு சேராது போகும் மாதங்களைப் பொய் மாதங்கள் என்று தள்ளிவிடுகின்றனர்.

சைத்திர மாதம் சௌரமான சித்திரையுடன் தொடர் புடையதாக இருக்கவேண்டும்; அதாவது சைத்திர மாதத்தின் முடிவு நாளாகிய அமாவாசை சித்திரை மாதத்தில் இருக்கவேண் டும்; அதாவது சித்திரை மாதத்தில் வரும் அமாவாசையோடு சாந்திரச் சைத்திரம் முடியும்; அதன் மறுநாள் சாந்திர வைசா கம் தொடங்கும். அந்த வைசாகம் வைகாசியில் வரும் அமா வாசையுடன் முடியும். சௌர ஆண்டு 365 நாள், 15 நாழிகை, 31 விநாடி கொண்டது; சாந்திர ஆண்டோ முன் கூறியபடி 354 நாள், 48 நாழிகை, 8 விநாடி, 36 தற்பரை கொண்டது. அதாவது சாந்திர ஆண்டைக் காட்டிலும் 10 நாள், 27 நாழிகை

மிருதியாகக் கொண்டது சௌர ஆண்டு. அதனால் சில ஆண்டுகளில் சித்திரை மாதத்தில் இரண்டு அமாவாசை வரும்போது முதல் அமாவாசையோடு சைத்திர மாதம் முடிந்துவிடும்; வைசாகம் மறுநாள் தொடங்கிச் சித்திரை மாதக் கடைசியில் வரும் அமாவாசையோடு முடிந்துவிடும். அதனால் வைசாக மாதத்திற்கு வைகாசி மாதத் தொடர்பு இல்லாமற் போய்விடுகிறது. ஆதலின் சுமார்த்தர்கள் சித்திரை மாதத்துடன் முடிகிற வைசாக மாதத்தைப் பொய் மாதம் என்று தள்ளிவிட்டுச் சித்திரை மாதக் கடைசியில் வரும் அமாவாசைக்கு மறுநாள் பிரதமை முதல் தொடங்கி வைகாசி மாதக் கடைசியில் வரும் அமாவாசையோடு முடிகிற மாதத்தை நிச வைசாகம் என்று கொள்கின்றார்கள். இங்ஙனமாக வருகிற பொய்மாதப் போக்கினாலேயே பல மாறுபாடுகள் விளைகின்றன.

நிகழும் மன்மத ஆண்டில் ஆவணி மாதம் முதல்நாள் ஓர் அமாவாசையும் முப்பதாம் நாள் ஓர் அமாவாசையும் வருதலினாலே முதல் அமாவாசையோடு சிராவணம் என்ற சாந்திர மாதம் முடிந்துவிடுகிறது; அதன் மறுநாள் தொடங்குகிற பாத்திரபத மாதத்திற்குப் புரட்டாசி மாதத் தொடர்பு அற்றுவிடுகிறது. மகமதியருடைய முதல்நாளுக்கு வளர்பிறைத் திருதியை இரவில் இருக்கவேண்டும்; அதாவது அன்று மூன்றாம் பிறைச் சந்திரனைக் காணுதல் வேண்டும் என்பது விதி; அதைப் போலவே சுமார்த்தர்களுடைய மாதத்திற்குப் பிரதமை சூரிய உதயத்தில் இருக்கவேண்டும் என்பது விதி. இவ்விதிப்படி ஆவணி மாதம் 31௳ பிரதமை சூரிய உதயத்தில் இல்லை. அதனால் அந்த நாளும் பொய்ம்மாதத்தோடு சேர்ந்த பொய்ந்நாளாகவே முடிகிறது. புரட்டாசி மாதம் முதல்நாளிலேயே சாந்திரப் பாத்திரபதம் தொடங்குகின்றது. ஆதலின் இந்தப் பாத்திரபதத்திற்கு ஆவணித் தொடர்பே இல்லாமற் போய்விட்டது.

ஆவணி மாதம் 2௳ யிலிருந்து 31௳ முடிய அதிக பாத்திரபதம் அல்லது பொய்ப் பாத்திரபதம் என்று சுமார்த்தர்கள் கொண்டாலும் அக்காலத்தில் வரும் தங்களுடைய பிள்ளைகள் முதலியோர் பிறந்தநாள், முன்னோர் இறந்தநாள் இவைகளை அக்காலத்திலேயேதான் செய்கின்றார்கள். மேலும் ஆவணியில் வரும் பிரதோடம், அமாவாசை, பூரணை முதலிய விரதங்களை அவர்கள் கொள்ளாமல் விடுவார்களா? "சிராவண கிருஷ்ணாட்டமி" என்று அவர்கள் கூறும் வைகானச பாஞ்சராத்திர சிசயந்தி விழாவை—அதாவது கண்ணன் பிறந்த நாளை ஆவணி ௴ 24௳ யன்றுதான் பஞ்சாங்கத்திற் குறித்திருப்பதேன்? அட்டமி என்பதும் திதிதான், பிள்ளையார் சதுர்த்தி என்பதும்

தி தான்; அட்டமியாகிய சீசயந்தியை மட்டும் அவர்கள் ஆவணியிற் குறித்துப் பிள்ளையார் சதுர்த்தியை மட்டும் புரட்டாசியிற் குறிப்பானேன்? சீசயந்தியை ஆடி மாதத்திற் குறித்தால் வைணவர்கள் எளிதில் விட்டுவிடுவார்களா? அதனால் அவர்கள் ஆடி மீ 25உ யன்று "சுமார்த்த சன்மாட்டமி" என்று தம் விரத முறையைப் பிரித்துக் குறித்துக் கொண்டு வைணவபுறமாக அதனை ஆவணியிலே குறித்தது ஆராயத் தக்கது!

ஆனால், பிள்ளையார் சதுர்த்தியைத் தம் மனம்போல அவர்கள் புரட்டாசி மாதம் கொள்ளட்டும். சைவபுறமாக அதாவது ஆகமோக்தமாக "ஆவணி மீ 5உ யிலும் சைவ விநாயக சதுர்த்தி" என்று குறிப்பிடுவதுதானே ஒழுங்கு? ஆதலினாலே சைவப் பெருமக்கள் இதனை நன்கு கவனித்து விநாயகசதுர்த்தியை ஆவணி மீ 5உ கொண்டாடித் திருவருளுக்குப் பாத்திரராகும் படி வேண்டுகின்றோம். புரட்டாசியில் விநாயகசதுர்த்தி கொண்டாடுவது சிவவாக்கிய ஆகமவாக்கியங்களுக்குப் புறம்பானது; ஆதலின் கோவில்களில் புரட்டாசியிற் கொண்டாடுவது பாவமான செயலாகும்.

2. நவராத்திரி விழா

நவராத்திரி என்பது ஒன்பது இராத்திரி எனப் பொருள் படும். புரட்டாசி மாதம் வளர்பிறைப் பிரதமை முதல் நவமி முடிய ஒன்பது நாட்களும் பார்வதி தேவியைப் பூசித்துத் திரு விழாக் கொண்டாட வேண்டும். காமிகாகமம்,

"கன்யாசிதப் பிரமா மாரப்ய நவம்யந்தம் உமாவிரதம்"

மேலே கண்ட காமிகாகம வாக்கியத்தை ஆராய்ந்தால் கன்யா மாதத்தில் அதாவது புரட்டாசி மாதத்தில் அமாவாசை கழிந்த மறுநாளாகிய பிரதமை முதல் நவமி முடிய நவராத்திரி என்பது பெறப்படும். இதையே பூர்வகாரணாகமம்,

"அதாதஸ் சம்பிரவக்ஷ்யாமி நவராத்திரி விதிக்கிரமம்,
ஆஸ்வயுக் சுக்லபக்ஷே து பிரதிபந் நவம்யந்தகே
பிரதிபத் தினமாரப்ய விரதோத்சவம் சமாசரேத்."

என்று கூறுகிறது. இதில் ஆஸ்வயுக் என்பது சாந்திரமான ஐப்பசியாம். சாந்திரமான ஐப்பசி பெரும்பாலும் புரட்டாசியிலேயே பிரதமை முதல் நவமி முடிய வருமாதலால் இந்த வாக்கியம் தோன்றியது. ஆகையால் இதைச் சௌரமான ஐப்பசி என்றாவது அல்லது சாந்திரமான ஐப்பசி என்றாவது மயங்கி

விடுதல் கூடாது. சாந்திரப் பெயராக இங்கே கூறப்பெற்ற ஆஸ்வயுக் சௌரமானப் புரட்டாசியையே உணர்த்தும். இவ் வுண்மை அப்பூர்வ காரணாகமம் மகோத்சவ விதிப்படலத்தில்,

"சௌரமாச : பிரசஸ்தோகி சாந்திரமாசோப்ரசஸ்தகம்"

"சௌர மாதமே மேலானது, சாந்திர மாதம் அற்பமானது" என்று விதிப்பதால் விளங்கும். மேலும் காமிகாகமம் நவராத்திரி விதி கூறுமிடத்தில்,

"சௌரமாஸே நகர்த்தவ்யா நவராத்திரிர் விசேஷத :
சாந்திரவாஸே நகர்த்தவ்யா, கிருதஞ்சேது ராஷ்டிர நாசனம்"

என்று கூறுகிறது. இதனால் "நவராத்திரியைச் சௌரமானத் திலேதான் செய்தல் வேண்டும்; சாந்திரமானத்திற் செய்யக் கூடாது; செய்தால் நாடு அழியும்," என்ற உண்மை வெளிப் படுகின்றது.

நவராத்திரியைப் புரட்டாசி மாதத்திலேதான் செய்தல் வேண்டும் என்பதை யாமளதந்திரம்,

"ததஸ்ச கன்யாமாசேது பூர்வ பக்ஷே விசேஷத :
பிரதமாயாம் சமாரப்ய நவம்யந்தம் பிரபூஜயேது"

என்று கூறுகிறது. பூர்வகாரணாகமம் ஓரிடத்தில் ஆஸ்வயுக் என்று கூறுவதைச் சாந்திர ஐப்பசி என்றோ, சௌர ஐப்பசி என்றோ தவறாகக் கொண்டுவிடக் கூடாது என்பதை நிலைநிறுத் தவே அகோர சிவாசாரியார் தமது நவமி பூசா விதியில்,

"மாசி பாத்திரபதேபட்சே சுக்லே பிரதிபதாதிகம்
நவம்யந்தம் விசேஷேண புஜயித்வா மகேஸ்வரீம்."

என்று கூறுகிறார். பாத்திரபதம் என்ற சொல் சௌரமானப் புரட்டாசியை உணர்த்தும். மேலும் ஆகமங்களெல்லாம் "சாந் திரமானமாகக் கூறப்பெறும் மாதப்பெயர்களை யெல்லாம் சௌரமான மாதப் பெயர்களாகவே கொள்ளல் வேண்டும்" என்று விதிக்கின்றன.

"ஆஸ்வயுக்" என்பதைச் சாந்திரமான ஐப்பசியாகக் கொண்டு பிரதமையே நவராத்திரியில் முக்கியம் என்று கொண் டால் அது சில ஆண்டுகளில் புரட்டாசி மீ முதலில் ஓர் அமா வாசையும் கடைசியில் மற்றோர் அமாவாசையும் வந்தால் ஐப்பசி மாதம் முதல்நாளிலே சாந்திரமான ஆஸ்வயுக் அதாவது ஐப்பசி தொடங்கும். அப்போது "கன்னியாகதேசவிதரி" என்ற ஆகம வாக்கியத்துக்கு மாறாகச் சௌரமான ஐப்பசியில் நவராத் திரியைத் தொடங்க நேரும்.

மேலும் நவராத்திரியில் பிரதமை பிரதானம் அன்று; நவமி மகாநவமி என்று பெயர் பெற்றது போலப் பிரதமை மகாபிரதமை

என்று பெயர் பெறவில்லை. பிரதமை பிரதானமாயின் அது மகாப் பிரதமை என்று பெயர்பெற்றிருக்கும். நவமியும் மகா நவமி என்று பெயர்பெற்றிராது. பெரிய கோவில்களிலும் பணக்காரர் வீடுகளிலும்தான் நவராத்திரி ஒன்பது நாளும் விழா வாக நடைபெறும். பொதுமக்கள் அனைவரும் மகாநவமியாகிய ஒரு நாளையே விழாவாகக் கொண்டாடி வருகிறார்கள். மேலும் நிகழும் மன்மத ஆண்டினில் சுமார்த்தர்கள் கணக்குப்படி மகாநவமி ஐப்பசி மாதம் 8வ செவ்வாய்க்கிழமை வருகிறது. அதனால் அதன் தொடக்கம் புரட்டாசி மாதம் 31வ திங்களன்று தான் ஆகும். இத்திங்கட்கிழமை துதியைதான் இருக்கிறது; பிரதமை இல்லவே இல்லை. புரட்டாசி மீ 30வ ஞாயிறன்றுதான் பிரதமை; அன்று தொடங்கினால் இவ்விழா மாநவமியோடு பத்து நாளாகிவிடும்.

நவராத்திரியில் மகாநவமியே முக்கியம். இதனைப் பின் வரும் ஆகம வாக்கியங்கள் நிலைநாட்டுவன:

> "கன்யாகதே சவிதரி சுக்லபட்சேஷ்டமியுதா
> மூலநட்சத்திர சம்யுக்தா சாமகா நவமீஸ்மிருதா"

என்று உத்தரகாமிகாகமம் துர்க்காபூசா விதிப்படலத்தில் விதிக்கிறது. இதன் பொருள்: "சூரியன் கன்னியா ராசியில் வந்த அளவில் வளர்பிறையில் அட்டமியுடனும் மூலநட்சத்திரத்துடனும் கூடிய திதி எதுவோ அது மகாநவமி என்று சொல்லப்படுகிறது," என்பது. இதனால் மகாநவமி என்பது கன்னியாரவி யாகிய புரட்டாசி மாதத்தில் இருக்கவேண்டும் என்பது இன்றியமையாத விதியாகிறது. மேலும் சாந்திரமானிகளாகிய சுமார்த்தர்கள் தங்களுக்குப் பிரமாணமாகக் கொண்ட விரதசூடாமணி,

> "மூலேத் வாவாகயேத் தேவீம் பூர்வாஷாடேது பூசயேத்"

என்று கூறுகிறது. இதன் பொருள்: "மூலநட்சத்திரத்தில் தேவியை ஆவாகனம் செய்யவேண்டும்; பூராடத்தில் பூசிக்க வேண்டும்" என்பது. "மூலநட்சத்திரம் அட்டமியுடன் சேர்ந்து வருவதும் பூராடம் நவமியுடன் சேர்ந்து வருவதும் புரட்டாசி மாதத்திலேதான் நிகழும்; ஐப்பதி மாதத்தில் வரவே வராது" இதையே உத்தரகாமிகாகமம் "கன்னியாகதேசவிதரி" என்ற வாக்கியத்தின் பின்னால்,

> "ஆஸ்வயுக் சுக்லபட்சேவா அஷ்டமி மூலசம்யுதா
> சாமகா நவமீக்ஞேயா திரைலோக்யேதிசு துர்லபா"

(ஆஸ்வயுக் மாதம் சுக்லபட்சத்திலேயாவது அட்டமி மூலத்தோடு சேர்ந்து மகாநவமி என்று சொல்லப்படுகிறது. அது மூவுலகத்தாராலும் அடையமுடியாதது) என்று கூறுகிறது. அதாவது

"கன்னியா மாதமாகிய புரட்டாசியை விடுத்து ஐப்பசி மாதத்தில் சாந்திரமான முறைப்படி மகாநவமியைக் கொள்ளும்போது மூலத்தோடு அட்டமி சேர்ந்து ஒரு காலத்திலும் மூன்றுலகத்திலும் ஏற்படாது" என்ற உண்மையே இதனால் நிலைபெறுகின்றது. நிகழும் மன்மத ஆண்டில் புரட்டாசி மீ 8உ அட்டமியும் மூல நட்சத்திரமும் சேர்ந்து வருவது காண்க.

மேலும் விசயதசமியைப்பற்றி மகுடாகமம்,

"கன்யாமாசே சிதேபட்சே தசாஹேது திதித்வயே
சமீபூசாச கர்த்தவ்யா தசம்யாம் சைவகாரயேத்
அன்யத்ரதிதி பூசாச ராஜாதுர்ஜய மாப்நுயாத்
கிராமகர்த்திரு விநாசாய தனதான்ய விநாசனம்"

(புரட்டாசி மாதத்தில் சுக்கிலபட்சத்தில் பத்தாவது தினத்தில் தசமியில் சமீபூசை செய்க; வேறுவிதமாகச் செய்தால் அரசர் தோல்வியடைவர், கிராமாதிகாரி கெடுவான், பொருளும் தானியங்களும் அழியும்) என்றும், அஜிதாகமம்,

"கன்யாமாசே சிதேபட்சே தசம்யாம்ச சமீம்யஜேத்
பூர்வாஹ்ணேவா பராஹ்ணேவா தசாஹே திதிசம்பவே
தத்காலேது விசேஷேண விதிவத் பூஜயேத்குரு:"

என்றும், காரணாகமம்

"மாஸே பாத்ரபதே சுக்லே தசம்யா ராதனம் குஹ
சாதிதௌ மிருக யாத்ராச சைவாகமேஷீ பாஷிதம்"

என்றும் கூறும் பிரமாணங்களால் விசயதசமியும் புரட்டாசி மாதத்திலேதான் என்பது தெளிவாகிறது. இதனால் மகாநவமி புரட்டாசி மாதத்திலேதான் இருக்கவேண்டுவது இன்றியமையாததென்பது சொல்லாமலே அமையும்.

ஆகையால் நிகழும் மன்மத ஆண்டில் புரட்டாசி மீ 9உ ஞாயிறன்றுதான் மாநவமி; 10உ திங்களன்றுதான் விசயதசமி என்பது நிலைபெறுகின்றமை காண்க.

3. கந்தர்சட்டி விழா

இனி, கந்தர்சட்டி விழாவைப்பற்றி ஆராய்வோம். முருகப்பெருமான் சூரபன்மனை அழித்த தினம் ஐப்பசி மாதத்திய வளர்பிறைச் சட்டியாம். இதனையே கந்தபுராணம், கந்த விரதப் படலத்தில் (செய்யுள் 20)

"வெற்பொடும் அவுணன் தன்னை வீட்டிய தனிவேற் செங்கை
அற்புதன் தன்னைப்போற்றி அமரரும் முனிவர் யாரும்

சொற்படு துலையில் திங்கள் சுக்கில பக்கந் தன்னில்
முற்பகல் ஆதி யாக மூவிரு வைகல்நோற்றர் ”

என்று கூறுகிறது. இதையே சகஸ்ராகமம் ஸ்கந்தோத்சவ விதிப் படலத்தில்,

“ துலாயாம் ரவிசம் ப்ராப்தௌ சுக்லபட்சே விசேஷத:
ஷஷ்டியந்த மூத்சவம் குர்யாத் சாந்யமாசம் நகாரயேத்”

(சூரியன் துலாராசியை அடைந்த அளவில் அதாவது ஐப்பசி மாதத்தில் சிறப்போடு கூடிய வளர்பிறையில் சட்டி வரையிலும் திருவிழா நடத்தவேண்டியது. பிற மாதங்களிற் செய்யக்கூடாது) என்று கூறுகின்றது. இவ்வுண்மையை மேலும் தெளிவாக கௌசிகப் பிரஸ்ந குமாரதந்திரம் என்ற ஆகம நூல் நிர்ணயிக்கிறது. அவ்வசனம் வருமாறு :—

“ அதாத சம்ப்ரவச்யாமி ஸ்கந்த ஷஷ்டி விதிம்ஸ்ருணு
நவாஹஞ்சாமி சப்தாஹம் ஷஷ்டா ஹஞ்ச திரியாஹகம்
அதவாதத்திநேவாபி சோத்ஸவஞ்ச சமாசரேது
துலாயாம் ரவிசம்பிராப்தௌ சுக்லபட்சே விசேஷத :
ஷஷ்டியந்தம் உத்சவம் கிருத்வா சாந்யமாசே நகாரயேது
காரயேது யதிமோஹேந கர்த்தா போக்தா விநஸ்யதி
நதோஷ : இதிவிக்யாத ஸ்கந்தஷஷ்டி துலாரவௌ
துவிவாரே கண்டிதே தித்யாம் ராத்ரௌ வியாபி விசேஷத:
திவா வியாப்தம் நகர்த்தவ்யம் கிருதஞ்சேது கர்மநாசனம்
சௌரமாநேந கர்த்தவ்யம் சாந்திரமாநே நகாரயேது.”

இதன் பொருள் வருமாறு :— “பிற்பாடு அதனுல் கந்தர் சட்டி விதியைச் சொல்கிறேன்; கேட்பாயாக. ஒன்பது நாளாவது, ஏழு நாள், ஆறு நாள், மூன்று நாளும், அல்லது அதே நாளாவது உற்சவம் செய்யத்தக்கது. சௌரமாதமான துலாத்தில் சூரியன் வந்தபோது அதாவது ஐப்பசிமீ வளர்பிறையில் சிறப்பாக சட்டிமுடிய விழாச்செய்க; மற்ற மாதத்திற் செய்யற்க. மயக்கத்தினுற் செய்வானேயானுல் செய்பவனும் செய்விப்பவனும் நாசமடைகிருர்கள். உற்சவ ஆரம்பத்தில் இரண்டு மாதம் சம்பவிக்குமானுல் குற்றமில்லை என்று கூறப்படுகிறது; கந்தர்சட்டி துலா மாதத்தில் (ஐப்பசி என்னும் சௌர மாதம்) தான். இரண்டுநாளில் திதி வருமானுல் இரவில் வியாபிப்பதே மேலானது; பகலில் வியாபித்ததிற் செய்யக்கூடாது. செய்தால் கர்மம் கெட்டுப்போம். சௌரமானம் செய்யத்தக்கது; சாந்திரமானத்திற் செய்யக்கூடாது.”

ஆதலின் நிகழும் மன்மத ஆண்டில் கந்தர்சட்டி விழா ஐப்பசி மாதம் 4உ வெள்ளிக்கிழமைதான். கார்த்திகை மாதம் 4உ செய்வது ஆகம விரோதம் என்பது நிலைபெறுகின்றமை காண்க.

அலர்சுமந்து ஒழிக!

[வித்துவான் திரு. செந்துறைமுத்து]

கடைக்கண் நோக்கில்—கண் பிறழா நேர் முகப் பார்வையில்—இதழோரப் புன்னகைத் தோற்றத்தில்—இரு உள்ளமும் ஒன்றுபடும் செயலில் எழுகின்றது அன்பு எனும் மலர். ஓர் வண்ணப் பூங்காவின் கண்ணோ அல்லது தருக்கள் நிறைவுற்ற சாலையிலோ தலைவன் தன் உள்ளத்தைக் கவரும் தலைவியைக் காணுகின்றான். காணும்போது அத் தலைவனின் உள்ளத்தில் ஏதோ புதிய உணர்வு எழும்புகின்றது. தன் அன்பைத் தன் கண்களின் வாயிலாக வெளிப்படுத்த முனைகின்றான். அத் தலைமகனைக் கண்ணுற்ற தலைமகளும் அவனுடைய கண்களில் வெளிப்படும் அன்பை அறிய முற்படுகின்றாள். அறிந்து அவளுடைய கண்களும் அவளன்பை வெளிப்படுத்தி நிற்கின்றது. எங்கோ இருந்து வந்து எதிர்ப்பட்ட இருவருக்குமிடையில் அன்பு தோன்றிவிடுகின்றது. நாளுக்கு நாள் தலைமக்களிடத்தில் களவு முறையிலேயே பிறைமதி போன்று அன்பு பெருகி விடுகின்றது.

களவு முறையில் இருந்து வரும் இத்தலைமக்களின் அன்பு மெல்ல, மெல்ல ஊரறியத் தலைப்பட்டது இருவரிடத்திலும் களவு முறையில் பூத்த அன்பு மலரை, ஊரும் உலகும் அறியும்படி உடனுக்குடன் பணியாற்றுவது அலர் என்பது. ஊரில் அலர் பரவாவிட்டால் இவர்களுடைய உற்றாரும், பெற்றோரும் எங்ஙனம் இவர்கள் அன்பை அறிய இயலும்? இத் தலைமக்களுக்குத்தான் இல்லத்தில் ஏது கடிந்துரை? ஊரில் ஏது இழிவுரை? எனவே, அலர் என்பதுதான் அவையனைத்தையும் தோற்றுவிக்கின்றது. தலைமகன் தலைமகள் இருவரிடத்திலும் அன்பு தோன்றும் பொழுதே ஊரில் அலரும் தோன்ற ஏதுவாகின்றது.

நாள்தொறும் பொழுது போக்கிற்காக மக்களில் பலரைப் பற்றிப் பல்வகையாகப் புகழ்ந்தும் இகழ்ந்தும் உரையாடுபவர்களைக் காண்கின்றோம். உள்ளதும் இல்லதும் பேசி ஊர்ப் பொது இடங்களில் உறங்கி விழிப்பவர்களையும் காண்கின்றோம். இவர்களிடத்தில்தான் அவ்வலர் என்பது முதன் முதல் அவர்களுடைய அன்பை வெளிப்படுத்துகின்றது. அதையறிந்த இவர்கட்கு, அதை இழித்துப் பேசுவதிலும், பலரிடத்தில் உரைப்பதிலும் பயிற்சியும் பழக்கமும் உண்டு. அங்ஙனம் செய்வதில் அவர்கட்குத் தனி இன்பமும் உண்டு. இவ்வூர் மக்கட்கு இன்பமாக இருப்பினும் அத் தலை மக்களுக்கு அலர் பகையாக அமைகின்றது.

இவ் அலர்தான் அன்புப் பாதையில் செல்பவர்களுக்கு முதலாவது துன்பநிலையாகும். பரந்த நீலவானில் முழுமதி மிதந்து கொண்டிருக்கின்றது. அதற்கு எவ்விதத் துன்பமும் இல்லை என்று கூறலாம்; எங்கோ ஒரு மூலையில் எழுந்த கருமேகம் வந்து பரவி அம் முழு நிலவையே மறைத்துவிடுகின்றது. அதே போன்றுதான், தலைமக்களின் உள்ளமாகிய வானில் மிதக்கும் அன்பு நிலவை அலராகிய மேகம் மறைக்க முன் வந்துவிடுகின்றது. இவ் வன்பர்களுடைய களவுச் செயல் எவ்விதத்தும் அலருக்குத் தென்படாமல் இருப்பதில்லை. அலரின் கண்கள் அவ்வளவு கூர்மை வாய்ந்தது என்று கூறலாம். இரு இளைஞர் எங்காவது மறைவாகக் கூடினாலோ, கூடி உலாவினாலோ, பேசினாலோ, பேசி மகிழ்ந்தாலோ அதை அவ்வப்போது அறிந்து அலர் ஊருக்கு உணர்த்துகின்றது. இளைஞர்களின் களவுநட்பை ஊரறிந்த பின்னர்த்தான் இருவரும மீண்டும் கூட இயலாநிலை ஏற்படுகின்றது. கூட இயலாது தனித்திருந்து வாடும் தன்மைக்கு பிரிவுத் துன்பம் என்று நுவலப்படும். இப் பிரிவுத் துன்பம் மிகுதியாக இருக்கும்பொழுது அவர்களுக்குப் பெற்றோர்களால் ஏற்படும் துன்பங்களும் எல்லையற்றதாகும். இத் துன்பநிலைக்கோர் எடுத்துக்காட்டு ஈண்டு விளக்கப் புகுவது.

செந்தமிழ்ச் செல்வமான எட்டுத்தொகைநூல்களுள் ஒன்றான நற்றிணையில் உலோச்சனார் என்ற புலவர்பெருமான் களவு முறையில் நட்புக்கொண்டவர்களின் நிலையையும், அந் நட்பைக் குறித்து ஊரறிந்த அலரையும், ஊர்மக்கள் அலர் தூற்றும் முறைமையையும், அதனால் தலைமகள் அடைந்த இன்னலையும் அழகுறக் காட்டுகின்றார்.

நெய்தல் நிலத்தைச் சார்ந்த கடற்கரை—அதையடுத்த அழகான ஒரு சிற்றூர்—அங்கு எழில்மிக்க மின்னற்கொடியாள் ஏற்றமுடன் வளர்கின்றாள். கடலலைகள் அவளுடைய கண்களின் புருவம்போல் வளைந்தலைக்கும் கடற்கரை. முத்துக்களைப் போன்ற கழிப் பரப்பு. அதனருகில் ஓர் எழில்மிக்க பூங்கா. பூங்காவினருகில் நெடுஞ்சாலையும் உள்ளது. மின்னற்கொடியாள் அச் சோலையுள் மலர் பறித்துச் சில ஆடல்கள் நிகழ்த்தினாள். அவளுடைய நற்றாயும் செவிலித் தாயும் மிகவும் செல்வமாகப் பொன்னினும் போற்றி வளர்த்தனர். அந் நங்கையும் எவ்வித இன்னலும் கவலையுமின்றிக் கடலலைகள் தேடிவந்து கொடுக்கும் வெண் சங்குகளையும், செம் பவழங்களையும் சேர்த்துவைத்து விளையாடினாள். சில தருணம் தம் தோழிமார்களுடன்கூடி கண்பொத்தியும், கழங்கு கொண்டும் ஆடினாள்.

நாளுக்கு நாள் வளர்ச்சியுறும் அந் நங்கை விளையாடுவ தையே தன் தொழிலாகக் கொண்டுவிட்டாள். அங்ஙனம் விளை யாடி வரும் நாட்கள் பல கழிந்தன. சிறு நங்கையும் பார்ப்போர் உள்ளத்தைக் கவரும் பருவப்பெண்ணாக மாறினாள். செந்தமிழ் இனிமையைப் போன்று இன்பம் பயக்கும் சேல்விழி மங்கை யானாள். அவள் முகத்தில் இளமையழகு பெருக்கெடுத்தது. அவள் உடலெழிலும் உயிரோவியமாக ஒளி வீசியது. அவள் கன்னத்தில் செம்மையும், கண்ணில் வெண்மையும் கருக்கொண் டிருந்தது.

இவ் வெழில் மிக்க நங்கை ஒரு நாள் மணம் கமழும் தாழை மடல்கள் நிறைந்த பொழிலில், வண்ண மலர்க் கொத்துக்களைக் கையில் ஏந்திய வண்ணம் புன்னைமர நிழலில் பொலிவுடன் நின் றிருந்தாள்—விரைந்து செல்லும் புரவிமிசை வன்மைமிக்க ஓர் கட்டழகன்—எங்கோ செல்ல வேண்டியவன் நெறிதவறிப் பூங் காவை யடுத்த அச் சாலையில் வந்தான். நெறிபுரியாது நின்று சிறிது சிந்தித்து நாலு பக்கமும் நோக்கினான். பூங்காவையும் அதன் வனப்பையும், அதனிடைப் புன்னைமரநிழலில் அழகு மிக்க பெண்ணுருவம் நிற்பதையும் நோக்கினான். என்ன நினைத்தானோ, தன் புரவியைத் தட்டிச் சோலையினுள்ளே சென் றான். செல்லும் பொழுதே புன்னைமர நிழலில் வண்ணமலர்க் கொத்துகளைத் தாங்கி நிற்கும் பெண்ணுருவப் பூங்கொடியோ, என எண்ணி வியப்புற்றான். புன்னை மரத்தருகில்போய் நின்றான் மெல்ல. புரவி வரும் ஒலியைக் கேட்ட அப் பெண் தன் முகத் தைத் திருப்பினாள். கட்டழகன் முகத்தைக் கண்டு நாணிக் கவிழ்ந்து தன் முகத்தைப் பின் வாங்கினாள் யாதும் பேச இய லாது. சென்று நின்ற கட்டழகன் தான் செல்ல வேண்டிய நெறியைக்கூறி 'யாது புகலுவாயாக' என மெல்லவே வினவினான்.

நாணிக் கவிழ்ந்த நங்கையின் தலை சிறிது நிமிர்ந்து திரும் பவும் நோக்கினாள்; ஆயின் யாதொரு மாற்றமுமின்று. அவனும் தான் கேட்டதை மறந்து அவளை நோக்கிய வண்ணம் நின்றான். சிறிது நேரம் சென்ற பின்னர் அவள் மெல்லிய குரலில் 'யாது வினவினீர்' என விளம்பினாள். அவனுக்கு யாதுரைப்பது என்று புரியாது ஒரு புதுமலர்ச்சியுடன் அவளை நோக்கியவண்ணம் காணப்பட்டான். சேய்மையில் நின்றிருந்த தோழி, இவற்றைக் கண்ணுற்றுத் தலைவியை அச்சத்துடன் ஆண்டிருந்தவாறே அழைத்தாள். தலைவியும் ஒன்றும் விளங்காவகையில் எதுவும் உரையின்றி உடனுறை தோழியிடம் சென்றுவிட்டாள். தோழி தலைவியை அழைத்துக் கொண்டு இல்லம் ஏகினாள்.

அப் பருவ நங்கையின்மீது அவன் அன்புகொண்டு விட்டான். அவளைப் பார்க்க வேண்டும், பேசவேண்டும் என்ற எண்ணம் மிகுதியாக எழுந்தது. ஆசையால் மறுநாளும் அப்பக்கம் வரலானான். பருவப் பெண்ணும் வழக்கம்போல் பூங்காவில் விளையாட வீற்றிருந்தாள். முன் நாளைப் போன்றே இன்றும் நோக்கினர். நோக்கில் உள்ளத்தை வெளிப்படுத்தினர். புன்னகை புரிந்தனர். சில உரைகள் பேசிமகிழ்ந்தனர். முன்னாள் போன்றே இன்றும் தோழி கூப்பிட்டாள். தலைவி செல்ல மனமில்லாது மீண்டும் மீண்டும் திரும்பிப் பார்த்தவண்ணம் சென்றடைந்தாள். இங்ஙனமே மறுநாளும் கூடினர்; பேசினர். அன்பு அரும்பை அழகாக மலரச் செய்தனர். அன்றும் தோழி அழைத்தாள். தலைவிக்கு எழுந்து செல்ல எண்ணமே இல்லை. தோழி வலிய வந்து அழைத்துச் சென்றாள். இங்ஙனம் மறைவாகக் கூடிய நாட்கள் கடலைபோல் கணக்கற்று உருண்டோடின. அவ்விருவருடைய உள்ளத்திலும் அன்பு எனும் மொட்டு நன்றாகக் கட்டவிழ்ந்து மலர்ந்து வண்டிற்கு மதுவளிக்கும் மலரைப்போல் மகிழ்வளித்தது.

மகிழ்வளித்த அக் கோலத்துடன் அவர்களுடைய நட்பு நின்றுவிடவில்லை. பூங்காவில் புன்னைமர நிழலில் கூடிப் பேசுவதைக் கண்ட அலர், தன் தொழிலை நிகழ்த்தத் துவங்கிவிட்டது. இவர்களுடைய கள்ள நட்பைக் குறித்து ஊர் முழுவதும் அலர் தோன்றியது. வாழ்நாளை வீணாக்குகின்றோம் என்பதை உணராது ஊரில் பலரையும் பலவகையாகப் பேசிக் காலங் கழிக்கும் ஆண்களும் பெண்களும் இவர்களுடைய நட்பை இழித்துரைத்தனர். ஊரில் யாண்டுச் சென்றிடினும் இவர்களைப்பற்றிய இழிவுரையே; இது அல்லாத இடமேயில்லை. அத் தலைவி இல்லத்தை விட்டு வெளியே புறப்பட்டால் போதும், பெண்ணினம் முழுவதும் அவளைப் பல்வகைக் கருத்துடன் பார்த்தலையும், ஒவ்வாத முறைமையில் நிந்தித்துப் பேசுதலையும் நிகழ்த்தாமல் இருப்பதில்லை.

ஊரவர் இழித்துரைப்பதைக் கண்ட அத் தலைவி வருந்தினாள். மன வருத்தம் தாழாது புலம்பினாள். அங்ஙனம் கொடுந்துன்பமுற்ற பொழுதெல்லாம் தோழிமார்கள் அவளை ஆறுதல் கூறித் தேற்றுவித்தனர். ஊர் முழுவதும் அலரும் மிகுதியாயிற்று.

ஒரு நாள் அலர் தூற்றுவோர் சிலரும் பலருமாகக் கூடினர்; வழியில் வந்துகொண்டிருந்த தலைவியைக் கண்டனர். கண்டவுடன் தம் முகத்தைத் திருப்பிக்கொண்டு கண்ணின் கடைப் பார்வையைச் செலுத்தினர்; அவரவரும் தம்முடைய மூக்கின்

உச்சியில் சுட்டு விரலைச் சேர்த்தனர். மூக்கின் உச்சியில் விரல் வைத்து வியப்புடனும் அச்சத்துடனும் 'நற்குடியில் பிறந்தவள், நற்குணம் நிறைந்தவள் இவள் இங்ஙனம் கள்ள நட்புக்கொண்டு ஒழுகி வருகின்றாளே! இதுவரையில் ஒழுங்காக இருந்தவள் இப்பொழுது குறையுறுகின்றாளே!' என்று பல்விதமாக உரையாடினர். இவ்வுரையாடலைச் செவியுற்ற வண்ணம் செவியுறாதவள் போல் கலக்கத்துடன் சென்றாள்.

ஊரும் உலகும் அறிந்து உணர்ந்தும் இழிவுரையைத் தலைவியின் உற்றாரும் பெற்றோரும் உணர்ந்தனர். தம்முடைய பண்பட்ட குடியையும், குலத்தையும், பெண்ணையும் இங்ஙனம் இழித்துரைக்கின்றனரே என்று ஏக்கம் கொண்டனர். இதற்குக் காரணம் தம் பெண்தான் என்பதை யறிந்து அவள்மீது அளவற்ற சினம் கொண்டனர். அங்ஙனம் மனக்கவலையுடன் மகள்மீது சினங்கொண்ட பெற்றோர்களில் தலைசிறந்தவள் அவளைப் பத்துத் திங்கள் சுமந்தெடுத்துப் பாலூட்டித் தாலாட்டி விளையாட விட்ட தாய் தான். தலைவியினுடைய தந்தையைக் காட்டிலும் தாய்க்குத் தான் பெரும் துன்பத்தைப் பயந்து விட்டது அலர். தாய் தன்னுடைய அருமைப் பெண்ணின் வாழ்வு என்னவாகுமோ என ஏக்கமுற்றாள். எனவே, தான் அடக்க இயலாச் சினமுற்றாள். சினத்தை அடக்க முடியா நேரத்தில் அத் தாய் ஒரு சிறு கோலை எடுத்துத் தன் மகளை அடிக்க முற்படுவதுபோல் அடித்தாள். பல்வகையிலும் துன்புறுத்தினாள். இனிப் பூங்காவிற்குப் போதல் கூடாது. வீட்டைவிட்டு வெளியில் செல்லக்கூடாது என்று கடுமொழி பேசினாள். மகட்குக் கட்டளையிட்டாள். செல்வமாக வளர்த்தெடுத்த பெண்ணைச் சிறுகோல் கொண்டு அதட்டும் அளவிற்கு ஊரில் அலர் பரவி விட்டது. இப்பொழுது தலைவியின் துன்பத்தை எல்லையிட்டுரைத்தலும் இயலுமோ? தலைவிக்குத் தாயின் அதட்டுதலும், தலைவனைக் கூடாதிருக்கும் தனிமையும் தான் அலர் அளித்த பரிசு.

தலைவி தலைவனைக் காண இயலாமல் கலங்கினாள். ஊரார் தூற்றும் அலர்மொழியைக் கேட்டுப் புலம்பினாள். செல்வமாக வளர்த்த அவள் தாய் சிறுகோல் கொண்டு அடிக்க வந்தது அவள் உள்ளத்தை வருத்தியது. கண்கள் சிவந்தன. கன்னத்தில் நீர் வடிந்தது. உடல் வாடத் துவங்கியது, உணவும் அற்றது. உறக்கமும் இல்லை. இவைதான் அவளுடைய அப்போதைய வாழ்க்கைநிலை. இந்நிலையிலிருந்துதான் தன் அன்பரையும் அன்பையும் எண்ணி எண்ணி விம்மினாள்; ஆனால் இந்நிலையை அவன் அறியான்; ஆனால் அவனும் அவளைக் காணாது அல்லலுற்று வாழ்விழந்தவன் போன்று வாட்டமுற்றுத் திரிந்தான். தலைவி

யைக் கூடிய இடத்திற்கு வந்து இன்றாகிலும் வரமாட்டாளா, என்ற எண்ணத்துடன் காத்திருந்தான். தலைவி இவன் எண்ணப்படி வர இயலுமோ, வரவில்லை இறுதியாக மனக் குழப்பத்துடன் பித்தேறியவன்போல் தலைவியின் ஊரினுள் புகுந்து, தலைவியைத் தேடி அவள் வீட்டுப் பக்கம் வந்தான். அப்பொழுது தலைவியும் தோழியும் இல்லத்தின் பின்புறமாக உள்ள தோட்டத்தில் அமர்ந்திருந்தனர்; ஆகையால் தலைவன் வந்துள்ளதைத் தோழி அறியலானாள். அறிந்து சிறிது சிந்தித்தாள் தலைவியின் நிலையை எங்ஙனம் அவர்க்கு உணர்த்துவது என்று. தலைவனும் சோர்வு மிகுதியால் உடல் வன்மை யிழந்து அத் தோட்டத்தருகில் அமர்ந்தான். மேலும் அதை அறிந்த தோழி மிகவும் நன்மையாக அமைந்து விட்டது என்று எண்ணி மகிழ்ந்து உடனே கீழ்க்கண்டவாறு தலைவியை விளித்து உரையாடுகின்றாள்.

“தோழி! நீ வாழ்க! நம் தெருவிலுள்ள பெண்கள் சிலரும் பலரும் ஊரில் பல இடங்களிலும் கூடி நின்று, கடைக்கண் பார்வையால் சுட்டிக் காட்டி, வியப்புற்றவர்கள்போல் தத்தம் மூக்கின் உச்சியில் சுட்டுவிரலை வைத்துப் பழிச்சொல் கூறித் தூற்றினார்கள். அப் பழிமொழிகளைக் கேட்ட உன் அன்னை சினம் கொண்டு சிறுகோலை எடுத்துச் சுழலும்படி வீசி அடிக்க வந்து உன்னைக் கடிந்துரைத்தாள். இவற்றைக் கண்டு நான் மிகவும் துன்பமுற்றேன். ஆகையால் இத் துன்பமெல்லாம் தவிரும்படி, கடற்கரை யருகிலுள்ள சோலையில் மலரும் புது மலர்களைத் தீண்டிப் பூமணம் கமழும், நல்ல நிறம் பொருந்திய பிடரி மயிரையுடைய விரைந்து செல்லும்படியான குதிரையை உடைய தலைவனோடு நீ செல்வதற்கு நான் உடன்பாடுடையேன். நீ எழுவாயாக, அங்ஙனம் நீ சென்றொழிந்தால் அப்பொழுது இப் பொல்லாத ஊர் என்ன செய்யும்? அலர் தூற்றித்தூற்றி அழிந்துவிடும்,” என்று கூறினாள். தலைவனும் இதைச் செவிமடுத்திருந்தான். தலைவன் தலைவியைக் கொள்ளுதற்குரிய முறையில் மணந்து இன்புற்றான் என்பர்.

சிலரும் பலரும் கடைக்கண் நோக்கி
மூக்கி னுச்சிச் சுட்டு விரல் சேர்த்தி
மறுகிற் பெண்டிர் அம்பல் தூற்றச்
சிறுகோல் வலந்தனள் அன்னை யலைப்ப
அலந்தனென் வாழி தோழி கானற்
புதுமலர் தீண்டிய பூணுறு குரூஉச்சுவற்
கடுமான் பரிய கதழ்பரி கடைஇ
நெடுநாள் வரூஉம் இயல்தேர்க் கொண்கனொடு
செலவு அயர்ந்திசினால் யானே
அலர்சுமந்து ஒழிகஇவ் வழுங்க லூரே. (நற்றிணை: ௧௪௯)

இலக்கியத்தில் இன்பச்சுவை

[திரு. தி. வைரமுத்து]

இலக்கியம் பண்டைத்தமிழர் வாழ்வின் எதிர்த்தோற்றம். அகப்பொருள்பற்றிய நூல்களே இலக்கியத்தில் பெரும்பாலும் திகழ்வதைக் காணலாம். சிறுபான்மையே புறப்பொருள்பற்றி வருவன. அவற்றுள், முத்தொள்ளாயிரம் அகத்துறையை விளக்கும் நூல் என்னலாம். சேர, சோழ, பாண்டிய அரசர்களைப் புகழும் மூன்று தொள்ளாயிரப் பாடல்களையுடையது இந்நூல். 2,700 பாடல்களில் 109 பாடல்களே இன்று கிடைக்கப் பெற்றுள்ளன. மற்றவை காலக் கடலில் அமிழ்ந்துவிட்டதெனத் தெரிகிறது. இதன் ஆசிரியர் பெயர் காணப்படவில்லை. ஆனால், அவர் 2,000 ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்து வந்ததாகச் சில சான்றுகள் வாயிலாக அறியக்கிடக்கிறது. இனி, சற்று நூலுக்குள் நுழைந்து தமிழ்நலங்கண்டு அதன் பயனைப் பெறுவோமாக.

ஒருத்தி ஒருவனை அவன் அறியாதபடி அகத்தின்கண் நிகழும் அன்பு நெகிழ்ச்சியால் விரும்புகின்றாள். இதனையே கைக்கிளை என்பர். இத்துறையைத் தழுவியே இந்நூலில் பல பாடல்கள் அமைக்கப்பெற்றுள்ளன.

களம்புகுந்த காவலன் வாகையுடன் திரும்பும்நாள் எந்நாளோ? அவனுக்கு என்ன நேர்ந்ததோ? என அவனுடைய குடிகள் ஏங்கிய வண்ணம் எதிர்பார்க்கின்ற பொழுதில் ஊரவர் மனம் மகிழ வீதிவழியே தன் மால்களிற்றின்மீதேறி வீர முழக்கமுடன் உலா வருகின்றான் பாண்டியன். மங்கல முழக்கங்கேட்ட மாத்திரத்தில் மனைகள்தொறும் மாதர்கள் விரைந்தோடி வந்து மாறனைப் பார்க்கின்றனர். வெஞ்சமர் வென்ற வீரவழுதியை வாழ்த்திக் கைகுவித்துச் சிரந்தாழ்த்தி நின்றனர். அப்பொழுது காண்கின்றாள் ஓர் காரிகை.

அக் காரிகை வலம் வரும் வழுதியின் எழில்நலம் காண்கின்றாள். வீரபாண்டியனைத் தாங்கிவரும் வேழம், அப்பாவையின் வீட்டைக் கடந்து செல்கிறது. அவனை விரும்பிய அவள் உள்ளம் மாறனைப் பின்தொடர்ந்து நாடிச்செல்கின்றது. மன்னனிடம் மனத்தைப்போக்கிய மங்கை தன் மனத்தை மீட்க வகையறியாது சித்திரப்பாவையென்ன அசைவற்று நிற்கின்றாள். இதனையுணர்ந்த அன்னை, தலைவனது காட்சியைக் காணவிடாமல்

இல்லினுள் இழுத்து வெளிக்கதவினை அடைத்துக் கடிகாவல் புரியலானாள். வழி யாதும் புலப்படாத அவ்வணிதை தன் அன்னையின்பால் அதுபோழ்து உற்ற வருத்தத்தை எழில்பட வார்த்தைகளில் வடித்தெடுப்பதை உன்னுவோமாக.

'வாட்கணாய்! அரும்பவிழ்ந்த மலர்மாலையினையும், மாற்றலரைப் புறங்கண்டு அவர்தம் மண்ணைக் கைக்கொண்ட தானைகளையும், மறங்கனல்கின்ற வேல்தாங்கிய மாறனைப் பாராதே என்று நம் அன்னை சொல்லுகின்றனளே. அவள் என் இளமைப் பருவ நிலையைச் சற்றும் அறிதற்கில்லையே! நம்மைப் பயந்த அவள் மட்டிலும் இளமைப் பருவம் எய்தாது பிறக்கும்போதே மூப்புத் தன்மை பெற்றவளாய்ப் பிறந்தனளோ?' என்று காமமிக்க கழிபடர் கிளவியில் தலைவி தோழியைப் பார்த்துக் கூறுகின்றாள்.

> "வளையவாய் நீண்டதோள் வாட்கணாய்! அன்னை
> இளையளாய் மூத்திலள் கொல்லோ—தளையவிழ்தார்
> மண்கொண்ட தானை மறங்கனல்வேல் மாறனைக்
> கண்கொண்டு நோக்கலென் பாள்"

பாண்டிமன்னன்பால் மனம்போக்கிய பாவை தன் செவிலித்தாயர்களை நோக்கிச் சொல்வது அதனினும் நயம்பட அரிய சீரிய முறையில் புலவன் தன் கற்பனைத் திறத்தைக் கையாண்டிருப்பதைப் பயில்தொறும் பயில்தொறும் விளக்கும் இந்நூல் நயம் என்னலாம். அதன் பயனை ஈண்டுப் பெறுவோமாக.

'செவிலித்தாயரே! என் கைவளைகளைக் கவர்ந்து செல்கின்ற வீரனும் வாளாயுதத்தையுடையவனுமான வழுதி, அற்றைநாள் இரவு யானைமீதேறி வீதிவழிவந்து என் கண்ணுக்குள்ளே புகுந்துவிட்டனன்; கையை நீக்கிக் கண்களைத் திறப்பேனாயின் அவன் தப்பியோடிவிடுவான்; ஆகவே, என் உயிரைக் களைய நேரிடினும் என் கண்ணைத் திறந்துகாட்டேன்' என்கின்றாள் தலைவி.

> "தளையவிழும் பூங்கோதைத் தாயரே ஆவி
> களையினுமென் கைதிறந்து காட்டேன்—வளைகொடு
> வன்கண்ணன் வாள்மாறன் மால்யானை தன்னுடன்வந்
> தென்கண் புகுந்தா னிரா."

இன்னும் இதுபோன்ற சுவையான பகுதிகள் இந்நூலில் செறிந்திலங்குகின்றன. இவண் எடுத்துத்தரப்பட்டது இரண்டு பாடல்களே. இவை மாத்திரமல்லாமல் சோழ, சேரர்களைப் புகழ்ந்து பாடப்படும் பாடல்களிலும் இன்னனபோன்ற நற்சுவையூட்டும் பாடல்கள் பல உள்ளன.

அணுவுலகச் சிற்பி ஆல்பெர்ட் ஈன்ஸ்டீன்

[திரு. பி. எல். சாமி., பி. எஸ். ஸி.]

இமயத்தின் கொடுமுடியை எட்டிப் பிடித்தனர், தேன்சிங்கும், இலாரியும்; உள்ள, உடலுரத்தால். அறிவின் கொடுமுடியை எட்டிப்பிடித்தார் ஆல்பர்ட் ஈன்ஸ்டீன்; தமது அறிவுத் திறத்தால். அவர் அண்மையில் இறந்தார். அளவை அலுவலகத்தில் (Patent office) வேலை செய்த ஒருவர் தமது பேனாவினால் அறிவியல் உலகில் ஒரு புரட்சி செய்தார். அவர்தான் சுவிஸ் நாட்டில் பிறந்த ஆல்பெர்ட் ஈன்ஸ்டீன்.

குறுகத் தறித்த குறியீடு ஒன்று. அது அணுவைத் துளைத்தது! 'எழு' கடலைப் புரட்டிற்று! அது எது? ஈன்ஸ்டீன் கண்ட ஒரு வரிச் சூத்திரம் $E=MC^2$ இந்தச் சூத்திரம் அப்போது அறிவியல் உலகில் ஈன்ஸ்டீன் போட்ட அணுக்குண்டு. இதுவே ஐம்பது ஆண்டுக்குள் உண்மையான அணுக்குண்டைக் காண அடிப்படையாயிற்று. அதுவே, அணுவில் அடைந்துள்ள அளக்கமுடியாச் சக்தியை வெளியிடும் திறவுகோல்.

அவர் கண்டுபிடித்த சார்புக்கொள்கை (Relativity theory) மிகவும் சிக்கலானது என்பர். உலகில் அதைப் புரிந்துள்ளவர் பத்தே பேரென்றார் என் கல்லூரி அறிவியல் ஆசிரியர். 20 ஆண்டுகளுக்குமுன் அக்கொள்கையைத் தெரியாதவர், தெரிந்தவர்கள் போல் பேசினர். தெரிந்தவர் தெரிந்தவரை 'அவர் புரிந்தது பொய், நான் தெளிந்ததுதான் மெய்,' என்று பூசலிட்டுக் கொண்டனர். மின்காந்தம், புவிஈர்ப்பு முதலியவைகளெல்லாம் ஒரே அடிப்படையில் அடங்கும்படி அவர் வெளியிட்ட 'ஒன்றுபட்ட சார்புக் கொள்கை' அவரது அறிவின் கொடுமுடியெனலாம்.

'பொருள் (Matter) அழிவதில்லை. சக்தி (Energy) அழிவதில்லை' என்ற கொள்கை வெகுகாலமாக அறிவியல் உலகில் நிலவிவந்தது. அதை ஒரே வரியில் ஈன்ஸ்டீன் அழித்தார். 'பொருள் அழியும். பொருள் அழியும்போது அளவிலாத சக்தி பிறக்கும்' என்றார் ஈன்ஸ்டீன். நடைமுறையில் பின்னர் அது பல அறிஞர்களால் மெய்ப்பிக்கப்பட்டது. நீளம், அகலம், உயரம் என்று அளந்துவந்தது உலகம் கூடக் காலத்தையும் சேர்த்து அளக்கவேண்டும் என்பதைக் காட்டினார். எங்குமில்லாத 'ஈதரை' ஒழித்தார். சிக்கலான சார்புக் கொள்கையில் காலத்தை அவர் நகைச்சுவையுடன் எளிதாக விளக்கியுள்ளார். கூடிய காதலர்க்குக்

காலம் 'காரெனக்கடிது' பறந்து செல்கிறது. 'வெண்ணிலா ஊரில் பிறந்தாரைப்போலவரும் வெண்ணிலாவே! இந்த வேகம் உனக்காகாதே' என்று சொல்லச் செய்கிறது. ஆனால், பிரிந்த காதலர்க்குக் காலம் நகரமாட்டேனென்கிறது; எருமையாகிறது; அச்சுமுறிந்த தேராகிறது; விகடராமன் குதிரைபோல் நகராமல் 'இடக்கு'ச் செய்கிறது. இது ஏதோ ஒரு முறையில் சார்புக் கொள்கையில் காலத்தைக் குறிப்பாக உணர்த்தும். ஆனால், புரியும்படி அவ்வளவு எளிதல்ல அது.

எழுதுகோல்முனையில் அவர்செய்த மாபெரும் புரட்சியைப் புரியமுடியாத சிலர் புரட்டு என்று கருதினர், குருட்டுக்குருவி மதியால். அறிவின் கொடுமுடியில் ஏறி அவர்கண்ட நிறை மதியைச் சிலர் குறைமதியென்றனர் தங்கள் பிள்ளைப் பிறைமதியால். நடைமுறையில் காட்டமுடியாத கொள்கை என்று எண்ணினர். ஆனால், ஐம்பதே ஆண்டுகளில் அவர் கொள்கை பெரிதினும் பெரிய அண்டபேரண்டத்திலும் புகுந்து சிறிதினும் சிறிய அணுவையும் பிளந்தது. அண்டத்தில் இருந்த 'மெர்குரி' என்ற கோளின் (Planet) ஒழுங்கற்ற போக்கை விளக்கியது. கோள்களின் போக்கில் இருந்த சில சிக்கல்களை அவர் கொள்கை விளக்கியது. பிளக்கமுடியாது என்று ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகக் கருதிவந்த அணுவைப் பிளந்து மனிதன் கையில் மாபெரும் சக்தியைக் கொடுத்தது.

அறிவில் முன்னோடிகளான அறிஞர்கள் நாட்டில் நாடோடிகளாகின்றனர். ஈன்ஸ்டீன் இருந்த நாட்டைவிட்டு இறுதியில் அமெரிக்காவில் அடைக்கலம் புகுந்தார். பிரின்ஸ்டன் பல்கலைக் கழகம் வரவேற்றது. கேட்டதற்குமேல் நான்கு மடங்கு ஊதியம் தந்து கணக்குப் பேராசிரியராக்கிற்று. அவருடைய மேதை, குன்றின்மேலிட்ட விளக்காயிற்று. இட்லரின் இனவெறிச் செருக்கால் செர்மனி மாபெரும் மேதையை இழந்தது. செர்மனியின் இழப்பு, அமெரிக்காவின் சிறப்பு ஆயிற்று. கற்றோர்க்குச் சென்ற விடமெல்லாம் சிறப்பன்றோ? செர்மானியர் அணுக்குண்டு ஆராய்ச்சியில் முனைந்துள்ளதை அறிந்த ஈன்ஸ்டீன் அமெரிக்கக் குடியரசுத் தலைவரை அணுக்குண்டு ஆராய்ச்சியில் ஈடுபடுமாறு தூண்டினார். இட்லர் கையில் அமெரிக்கருக்குமுன் அணுக்குண்டு கிடைத்திருக்குமானால் குரங்கு கையில் கொள்ளி ஆகியிருக்கும். அதை உன்னியே ஈன்ஸ்டீன் அமெரிக்காவில் அணு ஆராய்ச்சிக்கு அடிகோலினார். ஆனால், பின்னர் அணுக்குண்டு அழிவுக்காகப் பயன்படுத்தப்படுவதைக்கண்டு மனம் வெதும்பினார். மனித மனம் பண்பட வேண்டுமென்றார். அணுவை ஆக்கத்திற்குப் பயன்படுத்தவேண்டும் என்று வற்புறுத்தினார். உலக

அமைதி, தனிமனிதன் உரிமை ஆகியவற்றிற்கு இறுதிக் காலத்தில் பாடுபட்டார். அதனால் நேருவுடன் நெருங்கிய கருத்தொற்றுமை உடையவரானார். அறிவுலக மேதையாயினும், கலையில் மிகுந்த ஈடுபாடுள்ளவர். உள்ளத்தைக் கனிவிக்கும் இசையில் ஈடுபாடுடையவர். பெர்னாட்ஷா அவருடைய அறிவியல் அறிவைவிட இசையறிவைப் போற்றினார். தமது கடைசிக் காலத்தில் அமெரிக்காவில் இருந்த அறிவுக் கட்டுப்பாட்டை எதிர்த்தார். உரிமைக்காக வாதாடினார். இக்காலத்தில் அறிஞனாயிருப்பதைவிட ஏழைத் தொழிலாளியாக இருப்பது நலம் என்றார். அத்துணை மனிதப் பண்பாடுடையவர் ஈன்ஸ்டீன்.

உலகில் பிறக்கும்போதே சிலர் சிறப்பாகப் பிறப்பார்கள். பணம், பதவி, சாதியின் காரணமாகச் சிறப்பு வரும். ஆனால், அவை உண்மைச் சிறப்பாகா. 'பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்' என்பது வள்ளுவர் வாய்மொழி. ஆனால், இறக்கும்போது சிறப்பாக இறப்பது எல்லார்க்கும் கைகூடுவதில்லை. ஆபிரகாம் லிங்கன், அண்ணல் காந்தி ஆகியோருக்கு இறப்பே மிகச் சிறப்பைத் தந்தது. ஆனால், அது எண்ணிக் கருதிப் பெறுவதில்லை. இறந்ததிலும் சிறப்பைப் பெற்றார் ஈன்ஸ்டீன்.

> "அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
> என்பும் உரியர் பிறர்க்கு"

என்பது குறள். என்பினும் சிறந்த தமது மூளையையும், மற்றும் உடலின் சிறந்த பாகங்களையும் மருத்துவ ஆராய்ச்சிக்கு எழுதிவைத்திருந்தார். அப்படி ஈந்ததால் இறப்பினும் சிறப்புப் பெற்றார் ஆல்பெர்ட் ஈன்ஸ்டீன்.

உயர்திரு. ரா. பி. சேதுப்பிள்ளை திருவம்மானை

[செல்லூர்க்கிழார் திரு. செ. ரெ. இராமசாமிபிள்ளை]

தண்ணார் தமிழின்பம் தந்தகொடைச் சேதுவுக்குக்
கண்ணார்பொன் னாடை கனித்தளித்தார் அம்மானை
கண்ணார்பொன் னாடை கனிந்தளித்தார் ஆமாயின்
திண்ணார்நல் அன்பின் திறனன்றோ அம்மானை
சீரார்சே துப்பிள்ளை செஞ்சொல்வளம் அம்மானை. (க)

ஐயா யிரம்வெண்பொன் அரசியலா ரும்அளித்தல்
செய்யாமற் செய்யும் சிறப்பன்றோ அம்மானை
செய்யாமற் செய்யும் சிறப்பதுவே ஆமாயின்
வையம் அளந்ததமிழ் மாண்பெதுவோ அம்மானை
செந்தமிழின் இன்பார் சேதுவைக்கேள் அம்மானை. (உ)

சென்னைமாகாணத் தமிழ்ச்சங்கம்

21-4-1955 ல் திருநெல்வேலியில் தண்டல்நாயகர் உயர்திரு. S. M. பாலகிருஷ்ண பிள்ளை, ஐ. ஏ. எஸ். அவர்களால் தொடங்கி வைக்கப்பெற்ற **ஆட்சிச் சொல்லாக்கக் கழகம்** (Administrative Terms Committee) **அறிக்கை.**

நமது சங்கம் 1934-இல் தோன்றியது ; அன்றுதொட்டுக் கலைச் சொல்லாக்கத்தில் ஈடுபட்டு அதற்கென்றே நான்கு பெரிய மாநாடுகள் நடத்தி 1938-இல் "**கலைச் சொற்கள்**" என்ற நூலைச் சென்னை, திருவாங்கூர் ஆகிய பல்கலைக் கழகங்களின் பொருளுதவிகொண்டு வெளியிட்டது. சென்னை அரசாங்கம் அந்நூலைப் பாராட்டி, தமிழ்நாட்டிலுள்ள உயர்பள்ளிகளுக்கெல்லாம் அரசாங்கச் செலவில் ஒவ்வொருபடி அனுப்பி அச்சொற்களைத் தாராளமாக ஆசிரியர்கள் பயன்படுத்திப் பாடங்களைக் கற்பிக்க வேண்டும் என்றும் சுற்றாணை அனுப்பியது. 1946-இலும் சென்னை அரசாங்கம் நமது சங்கம் குறிப்பிட்ட பெரியார்களைத் தமிழ்க் கலைச் சொல்லாக்கக் கழகத்திற் சேர்த்துக் கலைச் சொற்களை முடிவுசெய்து அச்சிட்டு வெளியிட்டுள்ளது. நம் சங்கப் பணிகளின் விளைவாகிய இவ்விரண்டு 'கலைச் சொற்களை'யும் அடிப்படையாகக் கொண்டுதான் இப்போது இலங்கை அரசாங்கம் கலைச் சொற்களை ஆக்கி வெளியிட்டு வருகிறது. நமது சங்கம் சென்னையில் ஆட்சிமொழி மாநாடு நடத்தி நமது நாட்டின் ஆட்சி தமிழிலேயேதான் நடைபெறவேண்டும் என்ற உண்மையை நிலைநாட்டி அதற்கு அடிப்படையான ஆட்சிக் கலைச் சொல்லாக்கத்திற்கு ஒரு கழகத்தையும் அமைத்திருக்கிருக்கிறது ; அக் கழகத்தின் தொடக்கவிழாவே இப்போது இங்கே நடைபெறுகின்றது.

ஆட்சிக் கலைச் சொல்லாக்கக் கழகத்தின் தலைவர் ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி திருவாளர் **தா. கோமதிநாயகம் பிள்ளையவர்கள்** பி. ஏ., பி. எல். வேளாண்மை, வைத்தியம், காவல், பத்திரப்பதிவு, அஞ்சல், பொறித்துறை முதலிய பல துறைகளில் பல ஆண்டுகள் மாவட்ட ஆட்சித் தலைவர்களாக இருந்த பெரியார்கள் இக் கழகத்தில் உறுப்பினராக இருக்கிறார்கள்; கல்லூரித் தலைவர்கள், வழக்கறிஞர்கள் பலர் இருக்கிறார்கள். இக் கழகத்திற் சேர்ந்து பணிபுரிவதற்குச் சென்னை அரசாங்கம் இம்மாவட்டத்தின் கீழ்பாதிக் கல்வி அதிகாரி திரு. கி. வேங்கடசுப்பிரமணியம் எம். ஏ., பி. டி. அவர்களுக்கு அனுமதி ஆணை உதவியிருக்கின்றது.

நம் சங்க அமைச்சர் டாக்டர் இ. மு. சுப்பிரமணிய பிள்ளையவர்களும் பேராசிரியர் ஆ. அருளப்பன் பி. ஏ., அவர்களும் தலைவர்களின் துணைகொண்டு சொற்களை ஆக்கி அவ்வப்போது இக் கழகத்தின் முன் வைத்து முடிவு செய்வார்கள். அச் சொற்கள் உடனே அச்சிடப் பெற்று இக் கழகத்தாருக்கும் இக் கழகத்தின் உறுப்பினராகச் சேர்ந்து பணியாற்ற இசைந்துள்ள, தமிழ்நாட்டின் பிற மாவட்டங்களிலுள்ள, பெரியாருக்கும் மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்களுக்கும், சென்னை அரசாங்கத்தை நடத்தும் அமைச்சர்களுக்கும் திருத்தங்கள் ஒரு குறித்த காலத்தில் அனுப்புமாறு விண்ணப்பத்துடன் அனுப்பப் பெறும்; செய்தித்தாள்களுக்கும் அவை அனுப்பப்பெற்று அவைகளின் ஆசிரியரிடமும் அவைகளைப் படிக்கும் பெரியார்களிடமும் திருத் தங்கள் கேட்கப்பெறும். திருத்தங்கள் வந்தவுடன் அவை ஒருமை

செய்யப்பெற்று ஆட்சிச் சொல்லாக்கக் கழகத்தார் முன் வைக்கப் பெற்று நன்றாக ஆராய்ந்து சொற்கள் முடிவு செய்யப்பெறும். பின் அவை அச்சிடப்பெற்று நூலாக வெளியிடப்பெறும்.

கலைச் சொற்களை ஆக்குவதில் நமது சங்கம் மேற்கொண்டுள்ள அடிப்படையான விதிகள் பின்வருவன :—

1. சொற்கள் சுருக்கமாகவும், தெளிவாகவும், பொருள்பொதிந் தனவாகவும் இருத்தல் வேண்டும்.

2. அவை தமிழோடு தமிழாய்க் கலக்கும் இயல்பினவாக இருத்தல்வேண்டும். இக் கொள்கைகளுக்கு முரணில்லாதிருந்தால் வேறு மொழிகளிலிருந்து சொற்களைக் கடன் வாங்கக் கூடாதென்றோ தமிழில் முன்னமேயே கலந்து இப்போது வழக்கிலுள்ள பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்தக் கூடாதென்றோ திட்டமான விதி யொன்றும் கைக்கொள்ளப் பெறமாட்டாது. தெளிவான, குறுகிய, பொருள் செறிந்த சொற்கள்; தமிழோடு தமிழாய்க் கலந்து இயங்க வல்ல சொற்கள்; இவையே ஆக்கப்பெறும்.

அரசாங்கமும், அரசியற்றலைவர்களும், புலவர்களும் வேண்டும் துணைபுரிந்து எமது கருத்து நிறைவேறித் தமிழாட்சி நிலைபெறுமாறு செய்தருள யாவரையும் பணிவுடன் வேண்டிக்கொள்கின்றோம்.

செய்திகளும் குறிப்புக்களும்

(க) கட்டாய இந்தித்திணிப்புக்கு ஆச்சாரியார் கூற்று

இந்திமொழி தற்கால நிலையில் கட்டாயப்படுத்தி, அது வழங்காத மாநிலங்களில் வைக்கக்கூடாதென்றும், அதை முதலில் வளப்படுத்திய பின்னரே கட்டாயப்படுத்தி வைக்கவேண்டுமென்றும், தில்லிச் சட்ட அவையிலும் சவகர் போன்ற கற்றுத்தேறிய உறுப்பினர்களும் ஆங் கிலத்தில் சொல்வதுபோல் இந்தியில் விளக்கமாகச் சொல்ல இயல வில்லை யென்றும், அதற்குக் காரணம் இந்திமொழி நன்கு வளர்ச்சி யடையாததுதான் என்றுங்கூறி அதை வளர்ப்பதற்கு மறைமுகமாகக் கூறியுள்ளார். கருத்தும் தெளிவாக இல்லை. இந்தியிலும் தமிழ் எத்துணை அளவோ மேம்பாடுடையது. ஞாலமளந்ததனைத் துமளந்த தன்மையுடையது. அதை ஆட்சிமொழியாக்க ஆச்சாரியார் பாடுபட லாகாதா?

(உ) கட்டாய இந்திபற்றி டாக்டர் மதுரம் எம். பி. கூற்று

24-4-55-இல் நாசரேத்து நகரில் நிகழ்ந்த கிறித்துவர்கள் மாநாட் டில், அம் மாநாட்டைத் திறந்து வைத்த டாக்டர் மதுரம் அவர்கள் கூறியதாவது :

'தாய்மொழியில்கூட பயிற்சியில்லாத சட்ட அவை உறுப்பினர் கள் இருக்கும்போது பார்லிமெண்ட் தபால், கார்டு, கடிதங்களில் கூட இந்தியைக் கட்டாயமாகவும், வற்புறுத்தியும் புகுத்துவது கூடாத தாகும்' என்றார்.

குறிப்பு : இந்தி மொழியை மற்ற மொழியினரிடம் திணிப்பது அரசியலின் சூழ்ச்சியாகும் ஆதலால், நாம் தமிழ் மொழியை வளர்த்தலில் கண்ணுங்கருத்துமாக இருத்தல் வேண்டும். இந்திப் படையெடுப்பு தானாகவே நின்றுவிடும்.

(ங) அறிவியல் அறிஞர் ஐன்ஸ்டீன் மறைவு

செர்மனி நாட்டில் அல்ம் என்னும் ஊரில் 1879 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 17.ஆம் நாள் தோன்றிய ஐன்ஸ்டீன் 1955 ஆம் ஆண்டு ஏப்பிரல்திங்கள் 18-ஆம் நாள் தம் 76 ஆவது அகவையில் தம் உயிர் நீத்தார். இவர்தம் பிரிவு உலகுக்கே மிக வருத்தந் தருவதொன்றாகும். இவர் உயிர் அமைதிபெறுக. இவர், சுருங்கிய வரலாறு இவ்விதழில் மற்றோரிடத்தில் வெளிவந்துள்ளது.

(ச) ஒய். எம். சி. ஏ. பட்டி மன்றம் பத்தாம் ஆண்டுவிழா

சென்னை ஒய். எம். சி. ஏ. பட்டி மன்றம் பத்தாவது ஆண்டுவிழா 29-4-55-ஆம் நாள் சென்னைப் பயிர்த் தொழில் அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் தலைமையில் சிறப்புற நிகழ்ந்தது. பல அறிஞர்கள் சொற்பெருக்காற்றினர்.

அதுகாலைப் பேராசிரியர் திரு. ரா. பி. சேதுப்பிள்ளையவர்களையும், புலவர்மணி, திரு. பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியாரவர்களையும் அறிஞர்கள் பலர் பாராட்டிப் பேசி, பாராட்டிதழ் வழங்கப் பெற்றன.

(ரு) நாட்டுப் பொதுமொழிபற்றி திரு. கிருட்டிணமேனன் கருத்து

கடந்த 3-5-55-இல் சென்னை வழக்கறிஞர் கழகச் சார்பில் திரு வி. கே. கிருட்டிணமேனன் அவர்களுக்கு ஓர் வரவேற்பளிக்கப்பட்டது. அதுகாலை அவர் ஆற்றிய பேருரையின் ஊடே நாட்டுப் பொதுமொழி பற்றியும் சில பேசியுள்ளார். அது வருமாறு :

நாட்டுப் பொதுமொழிக்கும் நாட்டு ஒற்றுமைநிலைக்குமிடையேயுள்ள தொடர்பு பற்றிப் பலரும் தவறான கருத்தே கொண்டுள்ளனர். மொழியைக்கொண்டு ஒரு இனத்தின் அடிப்படையை அறிய முயல்வதோ ஒரே மொழி பேசப்பட்டதால் ஒருமைப்பாடு நிலவ முடியும் என்று வாதிடுவதோ சரியல்ல. இதனால் பொதுமொழி காணும் முயற்சி கூடாது என்பதும் பொருளல்ல. பொதுமொழி தேவைதான். ஆனால் அதனைக் கட்டாயத்தின் மூலம் திணிப்பது கூடாது. மக்களே விரும்பி ஏற்கும்வகை காணல்வேண்டும். இந்தியாவில் பல மொழிகள் வழங்கி வருகின்றன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொருவித ஆற்றல் பெற்றவையாயிருக்கின்றன. இதனைச் சட்டத்தின் துணைகொண்டு அழித்துவிட முடியாது. கட்டாயத் திணிப்பு என்று ஏற்பட்டால் அதற்கு எதிர்ப்பு இருக்கத்தான் செய்யும். எனவே, எம்மொழியைப் பொதுமொழியாக்கினாலும் அதனைச் சட்டத்தின் துணைநாடாது மக்களின் விருப்பத்தின் வழியே செய்தலே நன்று.

மதிப்புரை

(க) சீவகசிந்தாமணி சொற்பொழிவு நினைவுமலர்

[பக்கங்கள் : உ௫௬. விலை : ரூ. 2. பதிப்பாசிரியர் சிந்தாமணிச் சொற்பொழிவாளர், வித்துவான் திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையவர்கள். வெளியிட்டோர் : சைனத் தமிழ் இலக்கிய மன்றத் தார். வழக்கறுத்த ஈசுவரர் கோவில் தெரு. ஆடிசன் பேட்டை, காஞ்சிபுரம்.]

நம் செந்தமிழ்க்கு அணியாக இலகும் ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாகத் திகழ்வது சீவகசிந்தாமணி யெனப் பெயரிய அரியநூல். நந்தமிழக மாந்தர்களின் அன்பு பண்பு வீரம் கல்வி கொடை செல்வம் தொழில் முதலிய பல துறைகளையும் ஒருங்கே விளக்கிச் சொல்லும் பெருங்காப்பியம் சிந்தாமணி. இதன்பின் எழுந்த நூல்கள் யாவும் இதன் கருத்தையும் சொற்களையும் சொற்றொடரையும் எடுத்தாண்டு தத்தம் நூல்களில் அமைத்துக் கொண்டன. இதைத் தமிழ்நூல் கற்றுத் துறைபோயவர் யாவரும் நன்குணர்வர். இடைக்காலத்தில் இதன் பெருமையும் சுவை நலமும் உணராமல் தமிழகம் மருண்டு கிடந்தது. இற்றைநாள் அறிஞர் பலரின் நன்முயற்சியால் மீண்டும் இந்நூல் புத்தொளி வீசத் தொடங்கிற்று. இது சமண சமயநிலையை உலகில் பரப்பத் தோன்றியதாயினும் காப்பியப் பண்பும் தன்னிக ரில்லாத் தலைவன் மாண்பும் வீர மேம்பாடும் அமைச்சர் நலந் தீங்கு களும் தாய்மை பெண்மை அறங்களும் அறிதற்கும் இன்பச் சுவையும் பிறவும் கண்டு மகிழ்தற்கும் இன்றியமையாக் கலைப்பெருங் கோயிலாய்ப் பொதுமையைக் கிளந்தோதும் அரிய கருவூலம் போன்றதாய்த் திகழ்கின்றது.

இதன்கண் நாவீறுபடைத்த நல்லிசைப் புலவர்கள் பலரால் திருத்தக்கதேவர் துதி என்பது முதலாக திருத்தக்கதேவர் திரு வுள்ளம் ஈறாக முப்பானேழு தலைப்புக்களில் அரிய பெரிய கட்டுரைகள் விழுமிய கருத்துடன் வெளிப்போந்துள்ளன. இதனைத் தமிழக மாந்தர் யாவரும் வாங்கிக் கற்றுத் தமிழ்ச் சுவைநலம் பெறுவாராக.

இதனைத் தொகுத்து பதித்துதவிய புலவர் வேணுகோபாலப் பிள்ளையவர்கட்கும், இதனை நாட்டில் வந்துலவத் துணைபுரிந்து வெளியிட்ட சைனத் தமிழ் இலக்கிய மன்றத்தார்க்கும் இந்நூலின் அரிய கருத்தைத் தமிழ்கூறு நல்லுலகம் பெறக் கைம்மாறு கருதாது உதவிய கட்டுரையாளர் யாவர்கட்கும் தமிழகம் நன்றிபாராட்டும் கடப்பாடுடையது.

இதுபோன்ற அரிய நூல்களைச் சைனத் தமிழ் இலக்கிய மன்றத்தார் வெளியிட்டுதவி நாட்டில் கலைச்செல்வத்தை வளர்க்க இறையருள் புரிவதாக.

(உ) தமிழர் திருமணத்தில் தாலி

[இந்நூலின் பக்கங்கள்: 114. விலை ரூ. 1-8-0. நூலாசிரியர்: டாக்டர் திரு. மா. இராசமாணிக்கனாரவர்கள் எம். ஏ. எல். டி., எம். ஓ. எல்., பி. எச். டி. வெளியிட்டோர்: செல்வி பதிப்பகம், காரைக்குடி.]

'தமிழர் திருமணத்தில் தாலி' என்னும் இந்நூலில் ஆசிரியரவர்கள் தம் அஃகியகன்ற நுண்ணுணர்வால் சங்க காலத்திலிருந்து தற்காலம்

வரை ஆராய்ந்து தம் முடிபை விளக்கியுள்ளார்கள். இவர்கள் முடிபு சங்ககாலத்தில் தாலியிருந்ததில்லை யென்பது. பழங்காலமுதல் துருவி ஆய்ந்தால் தமிழகத்தில் தாலி யென்ற பெயரால் ஒன்றில்லையாயினும் தாலியை ஒத்த ஓர் அடையாளம் உண்டென்றே கொள்ள இடனுண்டு.

இதில் காணப்பெறும் ஆய்வு, கற்றுத்துறை போகும் மாணவர் கட்கும், உண்மைகாண விழையும் ஆய்வாளர்க்கும் பெருந்துணை புரிய வல்லது. யாவரும் கற்றுக் கருத்தில் வைக்கத் தகுந்த நூல். இதனை உதவிய ஆசிரியாவர்களும் பதிப்பகத்தாரும் இன்னும் இதுபோன்ற பல நூல்களை உருவாக்கி நாட்டில் ஆய்வுப்புலத்தை வளர்க்கத் துணை புரிவார்களாக.

(ந) திருவள்ளுவர் காலம் யாது ?

[இந்நூலின் பக்கங்கள்: 69. விலை: ரூ. 1. ஆசிரியரும் பதிப்பகத் தாரும் மேற்கண்டவர்களே யாவர்.]

திருவள்ளுவர் உலகப் பொதுமறையாகிய திருக்குறளை உதவிய ஒண்மையர். இவர் இருந்த காலம் தெற்றெனத் தெளியவில்லை. இவர் வரலாறு பற்றிய கட்டுக்கதைகள் அறிவியலுக்கு ஒவ்வாதன. காலமும் அவ்வாறே. இதனை ஒருவாறு ஆய்ந்து முடிபு கூறுகின்றார் ஆசிரியர்.

திருக்குறட் கருத்துக்கள் சங்ககால நூல்களிலும் அதற்குப் பின்னர்க் காலந்தோறும் தோன்றிய நூல்களிலும் இடம்பெற்றுள்ளன. ஆயினும் அவைகளைக் கொண்டு அவ்வக்காலம் என முடிபு கூறுதற் கில்லை. ஆயினும் ஒரு காலம் இதுதான் என்று துணிதல் வேண்டும். அம்முறையில் ஆசிரியாவர்கள் நுனித்தறிந்து வள்ளுவர் காலத்தை கி. மு. 1 முதல் 300 க்கு உட்பட்டது என்று கோடலே அமைவுடைய தாகும் என்று கூறியுள்ளார்கள்.

ஆராய்ச்சியில் காலம் போகப் போக உண்மை புலனாகலாம். அதுவரை ஏதேனும் ஒரு வரையறை வேண்டுமன்றோ, அதையே இந் நூல் கூறுகின்றது.

ஆய்வு போற்றற்குரியது. வள்ளுவர் காலத்தையும் மாண்பையும், திருக்குறட் பெருமையையும் மேலும் அறிய வாய்ப்புத்தரும் நூல் இது. தமிழகத்தார் கற்று உண்மை காண்டற்கு வழிகாட்டியாகத் திகழ் கின்றது.

(ச) திருவள்ளுவர் திருநாள் மலர்

[இந்நூலின் பக்கங்கள்: 60. இதனை வெளியிட்டோர்: தமிழ்மறைக் கழகம் 44, 33-ஆம் ஒழுங்கை கொழும்பு 6.]

திருவள்ளுவர் நினைவுநாள் நாட்டில் பலவாறாகக் கொண்டாடு கின்றனர். ஒவ்வோராண்டும் வைகாசித் திங்கள் அனுட நன்னாளையே திருநாளாகக் கொண்டாட வேண்டுமெனப் பல வெளியீடுகளாகிய பத்திரிகைகளின் கருத்தையும் அறிஞர் சங்கங்களின் கருத்துக்களையும் சாரத்தையும் தொகுத்துத் திரட்டிக் கூறும் நூல் இதுவாகும். தமிழ் மக்கள் வாங்கிப் பயன்பெற வேண்டிய நூல்.

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே, அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.